MISSION PRESS 1840
PONDICHERRY

# சர்வவியாபி

SARVA VIABI

ESTD:1.3.1907
(Year-113)

23-06-2019 | சமய வளர்ச்சி சமுதாய மறுமலர்ச்சி | 1 | விகாரி வருடம் ஆனி 8 | வருட சந்தா ₹150 தனிப்பிரதி ₹ 6

புத்தகம் 56 | இதழ் 24 பக்கம்-12
e-mail:missionpress48@gmail.com
e-mail:missionpress48@yahoo.com
Ph: 0413/ 2334360
ஆசிரியர்: அருட்திரு C. அந்தோனி ரோச்

## ஜிப்மர் மருத்துவ நுழைவுத் தேர்வில் பெத்தி செமினேர் மாணவர்கள் தொடர் சாதனை பேராயர் அவர்களிடம் ஆசி பெற்றனர்.



**ஜி**ப்மர் நுழைவுத் தேர்வில் தொடர்ந்து 40 ஆவது ஆண்டாகப் பெத்தி செமினேர் பள்ளி மாணவர்கள் சாதனைப் படைத்து வருகின்றனர். இந்த ஆண்டில் (2018-19) இல் நடைபெற்ற நுழைவுத் தேர்வில் 11 மாணவர்கள் தேர்வு பெற்றுள்ளனர். மாணவர்கள் இச்சாதனைப் படைத்திட அல்லும் பகலும் அயராது உழைத்துவரும் எம் பள்ளியின் முதல்வர் அருட்தந்தை R. **பாஸ்கல்ராஜ்** அவர்கள் மாணவர் களுடன் இணைந்து நம் பள்ளியின் மேலாளரான பேராயர் Dr. **அந்தோணி ஆனந்தராயர்** D.D.,D.C.L. (புதுவை-கடலூர் உயர் மறை மாவட்டம்) அவர்களிடம் ஆசி பெற்றனர்.

இந்நிகழ் மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் பெரிய ஊக்கம் அளிக்கும் என்பதில் ஐயமில்லை. வெற்றி பெற்ற மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் மற்றும் பெற்றோர்களுக்கும் பள்ளி முதல்வர் நன்றி தெரிவித்துப் பாராட்டினார்கள்.

---



## எதிர்மறை எண்ணங்களுக்கு கைதிகளாக வேண்டாம்

**- திருத்தந்தை**

***இறைவனை நாடிச் செல்வோருக்கு, எப்பணியையும் மீண்டும் துவக்குவதில் மனத்தளர்ச்சியோ, சிரமமோ இருக்காது - திருத்தந்தை.***

ஒன்றை மீண்டும் துவக்குவது, அதிக சக்தியை எதிர்பார்க்கும் ஒரு செயல், ஆனால் இறைவன் அதற்குத் தேவையான சக்தியை எப்போதும் தன் மக்களுக்கு வழங்கியவண்ணம் இருக் கிறார் என்று, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இஞ்ஞாயிறன்று வழங்கிய மறையுரையில் கூறினார்.

மூன்று ஆண்டுகளுக்கு முன், இத்தாலியின் காமெரீனோ (Camerino) பகுதியில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் தங்கள் வீடுகளை இழந்து, இன்னும் தற்காலிக வீடுகளில் வாழ்ந்து வரும் மக்களை, ஜூன் 16, ஞாயிறு சந்திக்கச் சென்ற திருத்தந்தை, அவர்களுக்கு நிறைவேற்றிய திருப்பலியில், இவ்வாறு மறையுரை வழங்கினார்.

காமெரீனோ மக்களுக்கு மூவொரு இறைவன் பெருவிழா திருப்பலியை நிறைவேற்றியத் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இறைவனை நாடிச் செல்வோருக்கு, எப்பணி யையும் மீண்டும் துவக்குவதில் மனத்தளர்ச்சியோ, சிரமமோ இருக்காது என்று தன் மறையுரையில் எடுத்துரைத்தார்.

கடந்த கால எதிர்மறை எண்ணங்களுக்கு நாம் கைதிகளாக இருப்பதிலிருந்து நமக்கு விடுதலையளிக்கும் இறைவன், நம் சுமைகளை நாம் தாங்கி நடக்க, நமக்கு உள்ளிருந்து உதவிகள் செய்கிறார் என்று மேலும் கூறினார், திருத்தந்தை.

சக்தியற்ற நிலையை நாம் உணரும் வேளையில், இறைவன் நம் சுமைகளை அகற்றுவதில்லை, மாறாக நமக்கு ஆறுதல் வழங்கும் தூய ஆவியாரை வழங்குகிறார் என்பதை, திருத்தந்தை தன் மறையுரையில் வலியுறுத்தினார். நம் நம்பிக்கையை மீண்டும் கட்டியெழுப்புபவராக தூய ஆவியார் விளங்குகிறார் என்பதை, தன் மறையுரையில் சுட்டிக்காட்டியத் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், தூய ஆவியாரை வழங்கும் நம்பிக்கையே, நமக்குள் அமைதி யையும், மகிழ்வையும் தருகிறது என்று எடுத்துரைத்தார்.

ஆசிரியர் பேனா...

# வித்து விருட்சமானது

உலக வரலாற்றிலே ஒரு நிகழ்வு இருவேறு தாக்கங்களை உருவாக்கியது. சிலுவையிலே அரையப்பட்டு இறந்து அடக்கம் செய்யப்பட்ட இயேசுகிறிஸ்து என்பவர் உயிர்த்து உயிரோடு இருக்கிறார் என்பதுதான் அந்நிகழ்வு. 1) அரசாங்க முத்திரையிடப்பட்ட அவருடைய கல்லறைக்குக் காவல் காத்த காவலர், இயேசு உயிர்த்து கல்லறையில் இருந்து வெளியேறினார் என்ற உண்மையை, சமயத் தலைவர்களிடம் சொல்கின்றனர். சமயத் தலைவர்கள் அவர்களுக்கு கையூட்டு கொடுத்து உண்மையை மறைத்து பொய் சொல்லச் செய்தனர் (மத்.28:11-14). இது மக்களிடையே எதிர்வினைத் தாக்கத்தை உருவாக்கியது. மெசியாவாக நம்பப்பட்ட இயேசு சிலுவையிலே கொல்லப்பட்டு, அடக்கம் செய்யப்பட்டுவிட்டார் என்ற சோகத்திலே சீடர்கள் இருக்கின்றனர். இறந்தோருக்கு செய்ய வேண்டிய சமயச் சடங்குகளை நிறைவேற்ற சில பெண்கள் கல்லறைக்கு சென்றனர். அங்கே அதிசயம் நடந்திருப்பதைக் கண்டார்கள். காவலரைக் காணோம், கல்லறையை மூடியிருந்த கல் பிளந்து கிடக்கின்றது. "உயிரோடிப்பவரை இங்கே தேடுவதேன்? அவர் இங்கே இல்லை அவர் உயிருடன் எழுப்பப்பட்டார்" (லூக்.24:1-6) என்று வானதூதர் சொல்லக் கேட்டனர். கல்லறைக்கு வந்த மக்தலா மரியாவுக்கு இயேசு தோட்டக்காரனாகத் தோன்றி தான் உயிரோடிப்பதை உறுதிப்படுத்துகின்றார். (மேலும் இச்செய்தியை தம் சீடருக்கு அறிவிக்க அவளை அனுப்புகின்றார். (அரு.20:11-18) அவள் சொல்லிய செய்தியைக் கேட்ட பேதுருவும், யோவானும் வெறுமையான கல்லறையைத்தான் பார்த்தார்கள் (அரு.20:1-10). இந்த வெறுமையான கல்லறை இன்று வரையும் இயேசுவின் உயிர்த்தெழுதலுக்கு வளமையான சாட்சியமாக இருக்கிறது. மேலும் உண்மைக்குச் சாட்சியம் சொல்லும் மன உறுதியை சீடர்களிடம் உருவாக்கியது (திருதூ.ப.2:32).

2) புறக்கணிப்பும் அவமானமும் ஏற்பட்டாலும்,சாகும் அளவுக்கு நொறுக்கப்பட்டாலும், ஏன் சாவையே எதிர் கொண்டாலும் சீடர்கள் இயேசுவின் உயிர்த்தெழுதலுக்கு சாட்சியம் கூறினார்கள் (திருதூ.ப.2:32; 6:40; 7:54-60; 10:41-43; 12:1-5; 16:37; 2கொரி.4:8-11; 11:25 etc) எந்த அளவுக்கு இந்த உண்மை கொடூரமாக எதிர்க்கப்பட்டதோ அதைவிட பண்மடங்கு உறுதியுடனும் விரைவுடனும் உலகெங்கும் பரவியது.

இந்த உண்மைக்கு சாட்சியாக வாழ்ந்த சிறு குழு நாலாவட்டத்தில் புதிய மறையைத் தழுவியவர் என்றும் "திருச்சபை" என்றும் அழைக்கப்பட்டது. காலப்போக்கில் இந்த திருச்சபை உலகின் பல நாடுகளில் வேரூன்றி வளர்ந்தது. மகேந்திர வர்மன் என்ற பல்லவப் பேரரசன் இயேசுவின் பெயரால் தோன்றிய புதுமறையைப் பற்றி கேள்விப்பட்டிருக்கிறார். மகாபலிபுரத்தில் கட்டிமுடிக்கப்படாத ஒரு கோயிலைப் பற்றி, அவர் மகன் நரசிம்மன் கேட்கிறான். அக்கோயில் இயேசுவால் தோற்றுவிக்கப்பட்ட புதிய வேதத்தின் தெய்வத்திற்காக கட்டப்பட்டதாகவும், தனக்கு இன்னும் முழு தகவலும் கிடைக்கவில்லை என்றும் மகேந்திர வர்மன் சொல்கின்றார். இத்தகவலை "சிவகாமியின் சபதம்" என்ற வரலாற்று நாவலில் திரு கல்கி அவர்கள் குறிப்பிடுகின்றார். (26ம் அத்தியாயம் கற்கோயில்கள்).

சிறுவித்து முளைத்து விருட்சமான ஆலமரம் ஆண்டுகள் பல கடந்தாலும், விழுதுகள் படர்ந்து நடுமரத்தை தாங்குவதுபோல, இயேசுவின் சீடர்களுக்கும் பின், திருச்சபையும் இன்றுவரை உலகில் பரவி, இயேசுவின் பெயரால் தொண்டாற்றிக் கொண்டிருக்கின்றது. இத்திருச் சபையை "இயேசுவின் மறையுடல்" என்று குறிப்பிடப்படுகின்றது (திருதூ. ப.9:1-). திருச்சபை தோன்றிய காலம் முதல் இக்காலம் வரை துன்புறுத்தல்களை அனுபவித்துக் கொண்டுதான் இருக்கின்றது.

சமீபத்தில் முதியவர் ஒருவர் என்னை சந்தித்தார். அவருடைய கிராமத்தில் கிறிஸ்தவர்கள் குடி இருக்கும் தெருவில் வழிமறித்து மத பெறும்பாண்மையினர் தங்கள் கோயிலைக் கட்ட அடித்தலமிட்டிருக்கின்றனர் என்பதையும்; இது தொடர்பாக காவல் நிலையத்தில் புகார் செய்யப்பட்டிருக்கிறது என்றும் வருத்தத்துடன் பகிர்ந்து கொண்டார். அங்கே அவர்கள் அச்சத்துடன் வாழ்ந்து கொண்டிருப்பதாகவும் கூறினார். கிறிஸ்தவர்களின் கல்விச் சேவையையும், சமூகச் சேவையையும் பாராட்டும் அதே வேலையில், அவர்களின் கல்வி மற்றும் சேவை நிறுவனங்களுக்கு மறைமுகமாக கொடுக்கப்படுகின்ற இடர்கள் சொல்லி மாலாது. உதாரணம் ஒன்று சொல்லலாம். ஆதரவு அற்றவர்களுக்கு அன்புப் பணியாற்றுவதில் கொல்கத்தா அன்னை தெரேசா சபையினர் புகழ் பெற்றவர்கள். அச்சபை அருட்கன்னியர் ஒருவர் மீது பொய் குற்றம் சாட்டப்பட்டு ஓர் ஆண்டுக்கு மேலாக சிறையில் துன்புற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

எல்லா மதமும் சமமாக மதிக்கப்பட வேண்டும் என்ற மதச் சுதந்திரத்தை நம அரசமைப்புச் சட்டம் வலியுறுத்துகிறது. சுதந்திரம் பெற்று 75 ஆண்டுகளில் ஜனாதிபதியாகவோ, பிரதமராகவோ, உச்சநீதிமன்ற நீதிபதியாகவோ இதுவரை ஒரு கிறிஸ்தவர் இருக்க வாய்ப்பு கொடுக்கப்படவில்லை. 'உலகம் உங்களை வெறுக்கும்' (அரு.14: ). வெறுக்கப்பட்டாலும், துன்புறுத்தப்பட்டாலும், புறக்கணிக்கப்பட்டாலும் அன்புப் பணியாற்றுவது கிறிஸ்தவர்களின் பண்பு. இப்படி அன்புப் பணியாற்றும் வலிமை கிறிஸ்தவர்களுக்கு எங்கிருந்து கிடைக்கிறது என்பது பிற மதத்தினருடைய கேள்வி. இந்த மன வலிமையை இயேசு வாக்களித்த **தூய ஆவியார் கொடுக்கின்றார்.** "உள்ளம் கலங்க வேண்டாம், மறுல வேண்டாம், நான் உங்களைத் திக்கற்றவர்களாக விடமாட்டேன்... உங்களுக்கு துணையாளராகிய தூய ஆவியாரை தந்தையிடம் இருந்து அனுப்புகிறேன்". "உண்மையின் ஆவியானவர் வந்தபின், நிறை உண்மையை நோக்கி உங்களை வழிநடத்துவார்" (அரு.16:13) என்று உறுதியளிக்கின்றார். "நம் வலுவற்ற நிலையில் நமக்கு ஆவியானவர் துணை நிற்கிறார்" (உரோ.8:26) "தூய ஆவியானவர் சீடர்களுக்கு துணிவைத் தந்து வழிநடத்துகின்றார்"... நெருப்பு போன்ற நாவுகள் அவர்களுக்குத் தோன்றி, பிளவுண்டு ஒவ்வொருவர் மேலும் வந்து தங்கின. எல்லாரும் தூய ஆவியால் நிரப்பப் பெற்று, ஆவியானவர் அருளியபடி அயல்மொழியில் பேசத் தொடங்கினார்" (திருதூ.ப.2:1-4).

இயேசுவின் **தூய ஆவியார்தான்** இன்றும் திருச்சபையை வாழவைத்து, வழிநடத்திக் கொண்டிருக்கிறார். உடலுக்கு மூச்சுக் காற்று எப்படி அவசியமோ அப்படியே தூய ஆவியானவர் திருச்சபையின் வாழ்வுக்கும் பணிக்கும் அவசியம். ஞானம், புத்தி, அறிவு, விமரிசை, திடம், பக்தி, தெய்வபயம் என்னும் ஏழு கொடைகளால் தூய ஆவியார் நம்மை நிரப்புகின்றார். அதன் பயனாக நாம் அன்பு, மகிழ்ச்சி, அமைதி, பொறுமை, பரிவு, நன்னயம், நம்பிக்கை, கனிவு, தன்னடக்கம் என்ற கனிகளை கொடுத்து திருச்சபையும், சமுதாயமும் செழிப்புறச் செய்கின்றார்.

தூய ஆவியாரின் வரங்களைப் பெற்றவர்களாக அவர் கனிகளைக் கொடுப்பவர்களாக இருந்து, துன்பங்கள் வந்தாலும் துவண்டு விடாமல் துணிவுடன் இயேசுவுக்கு சாட்சிகளாக வெற்றியின் பாதையில் பயணிப்போம். உலகம் வெறுத்தாலும், வதைத்தாலும் சமுதாயத்திற்கு நன்மை செய்து இயேசுவின் சாட்சிகளாய் வாழ்வோம். ●

வாரச் சிந்தனை

ஆண்டின் பொதுக்காலம் 13ம் ஞாயிறு (30-06-2019) 1அர.19:16ஆ,19-21; கலாத்.5:1,13-18, லூக் 99:51-62

# "சாக்குபோக்கு வேண்டாமே"

அருள்திரு. P. லூர்து ஜெயராஜ்
துணை முதல்வர், பெத்தி செமினேர் மேல்நிலைப்பள்ளி, புதுவை.



பள்ளியில் படிக்கின்றபோது ஆசிரியர்கள் மாணவர்களுக்கு வீட்டுப்பாடங்களைக் கொடுப்பார்கள். மறுநாள் ஆசிரியர்கள் வகுப்பில் மாணவர்களைப் பார்த்து, "யார் யார் வீட்டுப் பாடங்களை முடிக்கவில்லை?" என்று கேட்கும் போது ஒரு சில மாணவ, மாணவியர்கள் எழுந்து நிற்பார்கள். "ஏன் வீட்டுப் பாடங்ளை முடிக்கவில்லை?" என்று ஆசிரியர் கேட்டால், "நான் ஊருக்கு சென்றிருந்தேன்", "எனக்கு உடல் நிலை சரியில்லை", என் பெற்றோருக்கு உடல்நிலை சரியில்லை நான்தான் பார்த்துக் கொண்டேன்' என்று சாக்குபோக்கு காரணங்களைச் சொல்லி தப்பித்து விடுவார்கள். வேலை செய்கின்ற இடங்களிலும், நமக்கு மேல் உள்ள அதிகாரிகள், நிறுவனத் தலைவர்கள், 'ஏன் வேலைகளை செய்யவில்லை?' என்று கேட்டால், அதேபோல் உடல் நிலை சரியில்லை, ஊருக்கு சென்றேன் களைப்பாக உள்ளது என்று சாக்குபோக்கு சொல்லி தப்பித்துக்கொள்ள வழிதேடுகிறோம். இவ்வாறு, மனிதர்களிடம் நாம் சாக்குபோக்கு காரணங்களை சொல்லி தப்பிக்கலாம். ஆனால் கடவுளிடம், ஆன்மீக வாழ்வில் சாக்குபோக்கு சொல்ல முடியாது. அது உண்மையான கிறிஸ்துவ சீடத்துவ வாழ்க்கையாக அமையாது. கலப்பையில் கை வைத்த பின் திரும்பிப் பார்ப்பது கிறிஸ்துவ அர்ப்பண வாழ்வுக்கு தகுதியாகாது என்பதை உணரவேண்டும்.

**துன்பங்களை ஏற்போம்:** இன்றைய நற்செய்தி வாசகத்தின் தொடக்கத்தில் இயேசு எருசலேமை நோக்கி செல்லும் நாள் நெருங்கி வரவே என்று வாசித்தோம். இதன் பொருள் இயேசு எருசலேம் சென்று பாடுகள், மரணம் இவற்றை ஏற்று துன்பப்படப் போகிறார் என்பது ஆகும். இதைப்பற்றித்தான் இயேசு, "என்னைப் பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து தன் சிலுவையை நாள்தோறும் தூக்கிக் கொண்டு என்னை பின்பற்றட்டும்" (லூக்.9:23) என்று கூறியிருக்கிறார். எனவே இயேசுவை பின்பற்றுவது என்பது துன்பங்கள், வேதனை நிறைந்த பயணம். நாம் விரும்புவது போல அப்பயணம் அமையாது. நம் தனிப்பட்ட வாழ்விலும், கடவுளுக்காகவும் துன்பங்களை, வேதனைகளை, கஷ்டங்களை சந்திக்கின்ற போது சாக்குபோக்கு சொல்லி தப்பிக்க முடியாது, தவிர்க்க முடியாது, மாற்று வழி கிடையாது. துன்பங்களை, வேதனைகளை ஏற்று வாழும் போதுதான் இயேசுவோடு நாமும் எருசலேம் பயணம் மேற்கொள்கிறோம்.

**எளிமை:** இயேசுவின் சீடனாக விரும்பிய ஒருவன் மிக மிக தாராள மனத்துடன் இன்றைய நற்செய்தியில் இயேசுவிடம், "நீர் எங்குச் சென்றாலும் நானும் உம்மை பின் செல்வேன்" என்கிறான். இயேசுவுக்கு இது மட்டும் போதாது. இத்தாராள குணம் செயலிலே காட்டப்பட வேண்டும். இயேசு அவனிடம், "நரிகளுக்கு வளைகள் உண்டு; வானத்துப் பறவைகளுக்கு கூடுகள் உண்டு; மனுமகனுக்கோ தலைசாய்க்கவும் இடமில்லை" என்றார். அதாவது இயேசுவின் சீடராவதற்கு முதல் தேவை எளிமை. ஏனென்றால் இயேசு மாட்டுத் தொழுவத்தில் பிறந்தார். தச்சன் மகனாய் வாழ்ந்தார். தொலைக்காட்சியில் விளம்பரத்தில் பார்ப்பதையெல்லாம் பிள்ளைகளுக்கு வாங்கிக் கொடுப்பது, சிக்கனம் இல்லாமல் பணத்தை வீணாகப் பயன்படுத்துவது, ஆடம்பர வாழ்க்கை வாழ்வது இவையெல்லாம் இயேசுவின் சீடராய் வாழ்வதற்கு தகுதியல்ல என்கிறார் இயேசு. வெறும் வார்த்தைகளால் மட்டுமல்ல, எளிமையான உடை, உணவு,உடைமை, உறையுள். இவையனைத்தும் நம் வாழ்க்கையின் வெளிப்பாடாக அமைய வேண்டும்.

**நற்செய்தி அறிவிப்பு முதல் கடமை:** இரண்டாவது நபரை இயேசுவே அழைக்கிறார். அந்த மனிதர் இயேசுவிடம், "முதலில் நான் போய் என் தந்தையை அடக்கம் செய்துவிட்டுவர அனுமதியும்" எனக் கேட்கிறார். இக்கோரிக்கை ஒன்றும் புதியதும், விசித்திரமானதும் அல்ல. ஏனென்றால் இயேசு வாழ்ந்த காலத்தில் வீட்டில் பெற்றோர் இறந்துவிட்டால் அவர்களை நல்லடக்கம் செய்யும் பொறுப்பு பிள்ளைகளைச் சார்ந்தது. யூத குருக்களும் போதகர்களும் கூட அந்த கடமையை நிறைவேற்றும் கட்டாயம் இருந்தது. ஆனால் இயேசு அந்த நபரிடம், "இறந்தோரைப் பற்றி கவலை வேண்டாம், அவர்கள் அடக்கம் செய்யப்படுவார்கள், நீர் போய் இறையாட்சியைப் பற்றி அறிவியும்" என்றார். பெற்றோர், பிள்ளைகள், குடும்ப உறுப்பினர்கள், அனைவரும் நமக்கு முக்கியமானவர்கள். அதைவிட நற்செய்தி அறிவிப்பு நம் முதல் கடமையாக அமைய வேண்டும் என்று இயேசு பணிக்கிறார்.

**கலப்பையில் கை வைத்தப்பின்...:** முதல் நபரைப் போல இவருக்கும் இயேசுவை பின்பற்ற ஆசை ஆனால், "முதலில் நான் போய் என் வீட்டில் உள்ளவர்களிடம் விடைபெற்று வர அனுமதியும்" என்கிறார். ஆனால் இயேசு அவரிடம், "கலப்பையில் கை வைத்தபின் திரும்பிப் பார்ப்பவர் எவரும் இறையாட்சிக்கு உட்படத் தகுதியுள்ளவர் அல்ல" என்கிறார். நான் கத்தோலிக்க திருஅவையில் இருப்பதால் எனக்கு என்ன பயன்? ஒரு சலுகையும் எனக்கு கிடைப்பது இல்லையே! நான் அந்த சமயத்தை சார்ந்த அந்த பையனை / பெண்ணை காதலித்துவிட்டேன், எனவே நானும் அந்த சமயத்திலேயே வாழப் போகிறேன். இதுதான் நவீன உலகம். இயேசுவின் சீடர்கள், "ஆற்றில் ஒருகால், சேற்றிலே ஒருகால்" என்றோ, "பாகால் தெய்வம் ஒரு பக்கம், நம் கடவுள் ஒரு பக்கம்" என்றோ வாழக்கூடாது. கலப்பையில் கை வைத்தப்பின் கண்களை அங்கும் இங்கும் சிதறிவிட்டால் நிச்சயம் உழவுக்கு கேடுவரும். எனவே இயேசுவின் சீடரிடம் வேண்டப்படுவது உண்மையான கத்தோலிக்க கிறிஸ்தவராய் வாழ வேண்டும் என்ற மன உறுதி, கடவுள் மேல் ஆழ்ந்த இறைநம்பிக்கை.

**சாக்குபோக்கு வேண்டாமே:** இன்றைய நற்செய்தியில் இயேசுவிடம் வந்து அவரது சீடராய் வாழ விருப்பம் தெரிவித்த மூன்று மனிதர்களும் நம்மையே பிரதிபலிக்கிறார்கள். நாமும் இயேசுவின் சீடராய், நல்ல கிறிஸ்துவ வாழ்க்கை வாழ விரும்புகிறோம். நமக்கும் நல்ல எண்ணங்கள், உயர்ந்த சிந்தனைகள் எழுகின்றன, ஆனால் பல தடைகள் சீடராய் வாழ விடாமல் தடுக்கின்றன. முதலில் என் பள்ளி, கல்லூரி மற்றும் வீட்டு கடமைகள் முடியட்டும், நான் ரொம்ப busy, செபம் செய்ய நேரமில்லை, ஆலயத்திற்கு செல்ல நேரம் இல்லை, எனவே என்னுடைய வேலைகள் எல்லாம் முடியட்டும் பிறகு நான் ஆன்மீக காரியங்களில் ஈடுபடுவேன் என்று பல சாக்கு போக்குகளை கூறி கடவுளையே தட்டி கழிக்கிறோம். பல்வேறு பணிகளுக்கு மத்தியிலும் இயேசுவையே முதற்கண்ணாகக் கொண்டு இயேசுவின் சீடராய் வாவ முயல்வோம். மற்ற கடமைகளை அவரே பார்த்துக்கொள்வார். இதுவே நமது ஆழ்ந்த இறைநம்பிக்கை, இதுவே பலரின் அனுபவம். எனவே நம் வாழ்க்கையில் சாக்கு போக்குகள் வேண்டாமே!



# மத நல்லிணக்கம் (1)

Dr.Sr.M.லில்லி மரி ME, புதுச்சேரி.

மதம் என்பது 'மதா' என்னும் வடமொழியில் இருந்து வந்தது. 'மதா' என்றால் கருத்து என்று அர்த்தம். மனிதராகப் பிறந்த ஒவ்வொருவருக்கும் கடவுள் பற்றியும், ஆன்மா, வாழ்வு, பிறப்பு இறப்பு பற்றியும் சொந்தமாகக் கருத்தக்களைக் கொண்டிருக்க உரிமை உண்டு. அந்தக் கருத்துக்களை மாற்றிக்கொள்ளவும் உரிமை உண்டு. கடவுளே இல்லை என்று சொல்லிக்கொள்ளவும் உரிமை உண்டு. இது ஒவ்வொரு வருடைய பிறப்புரிமை. இந்த உரிமையை மறுப்பது அநாகரிகம். இதற்காக மற்றவர்கள் மீது தன் கருத்தைத் திணிப்பது அத்து மீறல். இந்த மத உரிமைகள் பற்றி நமது அரசு கூறும் 4 சட்டங்களை மட்டும் இங்கு பார்ப்போம்:

**சட்ட எண்: 295:** வழிபாட்டுக்குரிய ஓர் இடத்தை அல்லது ஒரு மதச் சார்புடையவர்களால் புனிதமாகக் கருதப்படும் ஒரு பொருளை, அத்தகைய மக்களின் மத உணர்வுகளைப் புண்படுத்த வேண்டும் என்ற கருத்துடன், அல்லது அவர்களுடைய மத உணர்வுகள் புண்படுத்தப்படும் என்று தெரிந்திருந்தும், அழிப்பதும் சின்னாபின்னப்படுத்துவதும் அல்லது அசுத்தப் படுத்துவதும் குற்றமாகும். இந்தக் குற்றத்திற்கு இரண்டாண்டுகள் வரை சிறைக்காவல் அல்லது அபராதம் அல்லது இரண்டும் தண்டனையாக விதிக்கப்படும்.

**சட்ட எண்: 295A:** இந்திய குடிமக்கள் பலவகைப்பட்ட மதங் களையும் வழிபாட்டு முறைகளையும் பின்பற்றி வருகின்றனர். அத்தகைய உணர்ச்சிகளைச் சீற்றமுற்று எழச்செய்ய வேண்டும் என்ற தீய கருத்துடன் வேண்டுமென்றே பேச்சாலோ, எழுத்தாலோ அல்லது மறைமுகமாகவோ அவர்களுடைய மதத்தை அல்லது மத உணர்வுகளைப் புண்படுத்துவதும் அல்லது அப்படிப் புண்படுத்த முயற்சி செய்வதும் குற்றமாகும். இந்தக் குற்றத்திற்கு மூன்று ஆண்டுகள் வரை சிறைக்காவல் அல்லது அபராதம் அல்லது இரண்டும் தண்டனையாக விதிக்கப்படும்.

**சட்ட எண்: 296 :** மத வழிபாட்டிற்கு அல்லது மத சம்பந்தமான சடங்குகளைச் செய்வதற்கென்று கூடியிருக்கும் கூட்டத்தில் அமைதியைக் குலைக்கும் வகையில் புரியப்படும் எந்த செயலும் குற்றமாகும். இந்தக் குற்றத்திற்கு ஓராண்டு வரை சிறைக்காவல் அல்லது அபராதம் அல்லது இரண்டும் தண்டனையாக விதிக்கப்படும்.

**சட்ட எண்: 297 :** வழிபாட்டுக்குரிய இடங்கள், இடுகாடு, சுடுகாடு, இறந்தவர்க்கு ஈமச்சடங்குகள் செய்யப்படும் இடம், இறந்தவரின் அஸ்தி முதலியவை வைக்கப்பட்டுள்ள இடம் ஆகியவற்றில் தனிமனிதனின் உணர்வுகள் அல்லது உணர்ச்சி களைப் புண்படுத்த வேண்டும் என்ற கருத்துடன் அத்து மீறி நுழைவதும் குற்றமாகும். பிறருடைய உணர்வுகளுக்கு அல்லது மதத்திற்கு நம் செயலால் இழிவு உண்டாக்கப்படும் என்று தெரிந்திருந்தும் அத்து மீறி நுழைவது குற்றமாகும்.

இறந்தவரின் சடலத்திற்கு அவமதிப்பை உண்டாக்கக் கூடிய எத்தகைய செயலும் குற்றத்தின்பாற்பட்டதாகும். இறந்த வருக்கான ஈமச் சடங்குகளை நடத்துவதற்காக கூடியிருக்கும் கூட்டத்தினரின் அமைதியைக் குலைக்கும் வகையில் புரியப்படும் எந்தச் செயலும் குற்றமாகும். இந்தக் குற்றத்திற்கு ஓராண்டு வரை சிறைக்காவல் அல்லது அபராதம் அல்லது இரண்டும் தண்டனையாக விதிக்கப்படும்.

இவ்வளவு மென்மையாக மனித உணர்வுகளை மதிக்க நமது அரசு, சட்டம் இயற்றியுள்ளது. இதை மதித்துக் கடைபிடிக்காவிட்டால் அது அராஜகம்தானே! சட்டங்கள் மட்டும் மத நல்லிணக்கத்தைக் கொண்டு வந்துவிட முடியாது. ஒவ்வொருவரும் எடுக்க வேண்டிய முயற்சிகளும் பின்பற்ற வேண்டிய பண்பாடுகளும் உண்டு. இவற்றில் இரண்டை மட்டும் பற்றி இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

1. அடுத்தவர்களுடைய கருத்துரிமையை மதிப்பது மத நல்லிணக்கத்தின் முதற்படியாகும்.

2. அடுத்தவர்களைப் பற்றிய முன் தீர்மானங்களை அகற்றுதல் அடுத்த படி. இந்தக் குறிப்பிட்ட சமயத்தைச் சார்ந்தவர்கள் இப்படிப்பட்டவர்கள் என்று ஓர் எண்ணத்தை நாம் உருவாக்கிக்கொள்ளும் போது காரண காரியங்கள் இல்லாமலே அவர்கள் மீது பகையோ பாசமோ உண்டாகிறது. மீடியாக்கள் எத்தனை உண்மைகளை முன் வைத்தாலும் அல்லது திரித்துக் கூறினாலும் மறைத்துக் கூறினாலும் அவற்றை நம் முன் தீர்மானம் என்னும் தராசில் இட்டுதான் நம்புகிறோம் அல்லது நம்ப மறுக்கிறோம்.

நாம் தெரிந்துகொள்ள வேண்டிய வேறு சில உண்மை களும் உண்டு. எல்லா சமயங்களிலும் புனிதர்களும் உண்டு தீயவர்களும் உண்டு. எல்லாச் சமயத்தவருக்கும் தான் வாழும் நாட்டின் மீது பற்று உண்டு. தான் பேசும் மொழியின் மீது பற்று உண்டு. தன் கலாச்சாரத்தின் மீது மதிப்புண்டு.

மனித நேயம் உள்ளவர்கள் எல்லாச் சமயத்தினரிடை யேயும் உண்டு. எனவே யாரையும் நாட்டுக்கு அந்நியப்படுத்திப் பேசுவதும் நடத்துவதும் நாகரிகமற்ற தன்மையாகும். கிறித்தவர்களும் இஸ்லாமியரும் அந்நியப்படுத்தப்படுவது அனைவரும் அறிந்ததே.

இந்தியாவிலுள்ள மற்ற சமயத்தினரைப் போல கிறித்தவர்களும் இஸ்லாமியரும் இந்திய நாட்டின் மீது பற்றுடையவர்கள். இந்திய மண்ணோடும் காற்றோடும், கலாச்சாரத்தோடும் மொழியோடும் கலந்துவிட்டவர்கள். இந்தியாவிலுள்ள மற்ற சமயத்தினரைப் போல கிறித்தவர் களும் சுதந்திரப் போராட்டத்தின் போது தங்கள் நாட்டைப் பாதுகாக்க ஆங்கிலேயர்கள் மற்றும் போர்ச்சுகீசியரோடு போராடியிருப்பது வெளிப்படையான சேவையாகும். இந்நேரத்தில் கிறித்தவ சமுதாயம் நம் நாட்டுக்குச் செய்த, செய்துவருகின்ற சேவைகளைப் பட்டியலிட்டுக் காட்டுவது அவசியமாகிறது.

1. கிறித்தவ மக்கள் இரண்டே இரண்டு விழுக்காடு இருந்துகொண்டு இரு கப்பற்படை அதிகாரிகள், ஒரு இராணுவ அதிகாரி, ஒரு விமானப்படை அதிகாரி ஆக நான்கு உயர் அதிகாரிகளை வழங்கியுள்ளது.

2. மற்றும் 32 Lieutenant Generals, Vice Admirals என்னும் துணை நிலைத் தலைவர்கள், வான்படை உயர் அதிகாரிகள் Air Marshals 40க்கும் மேற்பட்ட Major Generals கப்பற்படைத் துணைத் தலைவர்கள் 150-க்கும் மேற்பட்ட படை அணித் தலைவர்கள் அதாவது Brigadiers, Commandors, Air Commanders இப்படி பலரை நாட்டுக்கு அளித்துப் பணிபுரிந்து வருகிறது சிறுபான்மையினரான கிறித்தவ சமுதாயம்.

3. மேலும் 1971-ல் பாகிஸ்தானுக்கு எதிராக நடந்த போரில் 4 கிறித்தவ உயர் தளபதிகள் சிறப்பாகப் போராடினர். அதற்காக அவர்கள் நால்வருக்கும் நமது அரசு **பரம 'வீர்ச் சேவா** என்னும் பட்டமளித்துக் கவரவித்தது.

4. இவையே அன்றி காவல் துறை, சுங்கத்துறை, ரயில்வே போன்ற பல துறைகளில் கிறித்தவர்கள் அவர்களுடைய நேர்மையின் பொருட்டும் உயர் பண்புகள் குறித்தும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

5.இன்று சாகாயம் I.A.S. அவர்களின் நேர்மையான சேவை அனைவரும் அறிந்ததே. இவையே அன்றி கல்வி, மருத்துவம், பொதுநலச் சேவை போன்ற பல நிலைகளில் கிறித்தவ சமுதாயம் ஆற்றும் பணி அனைவரும் நன்கு அறிந்ததே.

இந்த அளவு மற்ற மதத்தினரோடு ஈடுகொடுக்கும் அளவு உழைப்பவர்களை அந்நியப்படுத்தி அநீதி இழைப்பது அராஜகம் அல்லவா?

மத நல்லிணக்கத்தை நாடும் நாம் ஒவ்வொருவரும் ஓர் உண்மையைப் புரிந்துகொள்ள வேண்டும். மனிதனிடம் உள்ள தீய குணங்களில் ஒன்று **பிரிவினை** ஏற்படுத்துவது. அதற்காக மனிதன் எப்படியாவது ஒரு காரணத்தைக் கண்டுபிடித்து விடுவான்.

இந்து என்றும் இஸ்லாமியர் என்றும் கிறித்தவர் என்றும் பௌவுத்தர்கள் என்றும் மதத்தின் பெயரால் பிரிக்க முயற்சி செய்வான். எல்லோருமே ஒரே மதத்தைச் சேர்ந்தவர்களாக இருந்துவிட்டால் மொழி வாரியாக பிளவு ஏற்படுத்துவான். எல்லோருமே ஒரே மொழி பேசுபவர்களாக இருந்தால் மாநிலம் வாரியாக பிளவு ஏற்படும். எல்லோருமே ஒரே மாநிலத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தால் சாதியின் பெயரால் பிளவு ஏற்படுத்துவான். இப்படி பிளவுகளுக்கு எல்லையே இல்லை. பகுத்தறிவாளர்களாக, படித்தவர்களாக, நாகரிகமுள்ளவர்களாக நடந்துகொள்வது மத நல்லிணக்கத்துக்கு வழிகோலும். ●



# இந்திய வழி திருப்பலி

– சுவாமி ஆ. லூயிஸ்.

மறுமலர்ச்சியின் பாதையிலே தலத்திருஅவை பயணம் செய்யும்போது இந்திய மக்களின் பண்பாட்டிற்கு ஏற்ப வாழ்வும் வழிபாடும் இடம் பெற வாய்ப்புண்டு, வளர்ச்சி உண்டு, முயற்சியும் உண்டு என்று நாம் நிறைவு உணர்வை வளத்தெடுப்போம். ஐம்பது ஆண்டுகட்குமுன் பொதுத் திருஅவை அனுமதி அளித்த பன்னிரண்டு அம்சங்களையும் நாம் செயல்படுத்தும் போது இந்தியத் திருப்பலி இடம் பெற இயலும். இத்தகைய முயற்சியில் நம்மில் எவ்வளவு பேர் ஆர்வத்தோடு, படைப்பாற்றலோடு, பிரமாணிக்க உணர்வோடும் வழிபாட்டினை ஓர் அனுபவப்பூர்வமான கொண்டாட்டமாக மேற்கொள்கிறோம் என்று திருஆட்சியாளர்ள் சீர்தூக்கிப் பார்த்துப் பயணத்தைத் தொடர்வோம். திருஅவை எதிர்பார்க்கும் அளவுக்கு தாயகப்படுத்தும் பணி இடம் பெற முடியவில்லை ஏனெனில் பழகக்பட்ட பாதையில் முதியவர்களும் இளையோரும் எளிதாக பயணிக்க விரும்புகின்றனர். மாற்றங்களை மேற்கொள்ள தயாரிப்பு தேவையான அளவிற்கு இடம் பெறுவதில்லை. பொதுத் திருப்பலிகளில் கடினம் இருப்பினும், குழுப்பலிகளில் குருக்கள் செயல்படுத்த முயன்றால், மறுமலர்ச்சியின் அலைகள் பரவ வாய்ப்புண்டு.

**அடையாளங்கள்:** வெளி அடையாளங்கள் நமது உட்பொருளை வெளிப்படுத்துகின்றன. உட்பொருள் உயிர்த்த ஆண்டவரின் ஆவியால் திருஅவை கூறுவதுபோல தூண்டுதல், ஏவுதல் பெறுகின்றோம். இவ்வாறு இந்தியத் திருப்பலி பொதுவான சில அடிப்படை அடையாளங்களைத் தழுவி, அந்தந்த இடம் சூழல் பண்பாட்டிற்கு ஏற்ப தலஉணர்வும் பொது உணர்வும் இணைந்து வழிபாடும் வாழ்வும் அமைகிறது. மிதியடிகள் இல்லாமல் இருப்பது, தரையில் அமர்வது எளிதானது அல்லவா? நாம் வசதியாக அமரவிரும்புவது சுயநலம். இயேசுவின் பாடுகளில் ஓரளவாவது பங்கெடுக்காமல், உயிர்ப்பைக் கொண்டாடுவது பொருத்தமாகாது.

மேலைநாட்டு பூசை உடுப்புகளை விட்டுவிட்டு எளிமையாக நமது நாட்டிற்கு ஏற்ப மேல் சால்வை, அங்கவஸ்திரம் போன்ற உடுப்புகளைத் தல ஆயர்களின் வழிகாட்டுதலுக்கு ஏற்ப பயன்படுத்துவது உகந்தது. வழிபாட்டினை வழிநடத்துகின்றவர், வழிபாட்டில் பங்கெடுப்போர் பிளவுபட்டு இல்லாமல் தோழமை உணர்வோடு ஒரு திருச்சமூகமாக பங்கெடுப்பது நல்லது. சிந்தனையை ஆட்கொள்ளும் தத்துவப் பாடல்களுக்குப் பதிலாக, பஜனைப் பாடல்கள் இதயங்களைத் தூண்டுவதால் அவைகளை அதிகமாக பயன்படுத்துவது எளிது, எல்லாரும் எளிதாக பங்கெடுத்து பாட இயலும். நிற்பது, முழந்தாள்படியிடுவது, அமர்வது பனற அதிக அசைவுகளை அகற்றி, அமர்ந்த நிலையில் வழிபாடுகளைக் கொண்டாடுவது, தேவையில்லாத பராக்குகளை நீக்குவது போன்ற காரியங்களில் கண்ணும் கருத்துமாய் இருப்பது உகந்தது. எல்லாரையும் எல்லாரும் பார்த்து, பாடி, செபிப்பது பங்கெடுப்பது முறையானது. பலி செலுத்துகின்றவர்களே எல்லாக் காரியங்களையும், மேற்கொள்வதைவிட, திருவழிபாட்டு வழிகாட்டி நூல் கூறுவதுபோல பகிர்ந்து பங்கெடுப்பது பயன்மிக்கது. கொண்டாட்டமே ஆழ்ந்த தியானநிலையில் இடம்பெறுகிறது. ஆவியின் தூண்டுதலுக்கு ஏற்புடைய விதத்தில் வழிபாடு இடம் பெறுவது ஆழ்நிலை அனுபவத்தை அனைவருக்கும் அளிக்கும். இதற்காகவே மிகுந்த தயாரிப்புகளை ஒவ்வொரு நாளும் மேற்கொள்வது முக்கியம்.

**அருள்வாக்கு:** எல்லா விதமான வழிபாடுகளிலும், காலத்திற்கும், சூழ்நிலைக்கும் தேவைக்கும் ஏற்புடைய அருள்வாக்குகளைப் பயன்படுத்துவது முறையாகும். அருள்வாக்கை “வாசிப்பதற்குப்” பதிலாக “முழக்கமிடுவது” பொருத்தமான வழிபாட்டு சொல்லாட்சியாகும். அருள்வாக்கு, பாடல்கள் மற்ற காரியங்கள் எல்லாம் கண்டிப்பாக முன் தயாரிக்கப்பட்டால், நமது பங்கேற்பு இன்னமும் ஆழமாக இடம்பெறும்.

அருள்வாக்கின் பகிர்வு மக்களின், பங்கெடுப்போரின் வாழ்வு அனுபவத்திலிருந்து எழவேண்டும். கொள்கை அளவில் மக்களின் மனதைத் தொடாமல், சிந்தனையை மட்டும் தொடுவதென்றால் அவ்வளவு பயன்தராது. கேட்பவர்களின் இதயங்களைத் தொடும் என்பதை மறக்கக் கூடாது எதையும் யாரையும் நேர்முகமாக அல்லது மறைமுகமாகத் தீர்ப்பிடாது அருள்வாக்கின் நாயகர் உயிர்த்த ஆண்டவர் என்ன, யாருக்கு, எப்படி தூண்டுதல் தருவார் என்று பகிர்வது பொருத்தமாகும். சிந்தனை வழிவரும் போதனையை யாரும் கூர்ந்து கவனிப்பது அரிது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. பொதுப்பூசையின், குழுப்பூசையின், சிறிய மந்தையின் தேவைக்கு ஏற்ப பகிர்வு இடம் பெறுவது சரியாகும். பங்கெடுப்போரின் நம்பிக்கையை நாம் படிப்படியாக வளர்த்தெடுப்பது முறையாகும். திருப்பலியின் முதல்பாகம் அருள்வாக்கு, இரண்டாவது பாகம் திருவிருந்து, இரண்டிலும் முழுமையாக பங்கெடுப்பது முக்கியம். அருள்வாக்கின்றி திருவிருந்தும், திருவிருந்தின்றி அருள்வாக்கும் என்பது பொருத்தமாகாது.

**திருவிருந்து:** அருள்வாக்கு நம்மை தயாரிக்கின்றது. அதன் உச்சக்கட்டம் தான் திருவிருந்தில் நிறைவு பெறுகின்றது. திருவிருந்தின் சிறப்பை நாம் அனைவரும் உணர்வது உத்தமம். புதிய பூமியையும், புதிய வானகத்தையும் நம் கடவுள் மகன் வழியாக உருவாக்க, தூய ஆவியின் வல்லமையால், பாவமில்லாத மரியன்னையின் கருவில் உருவாகி, புதிய உடலையும், புதிய இரத்தத்தையும் இயேசு திருவிருந்தில் நமக்கு அளிக்கின்றார். நற்கருணையில் இருக்கும் ஆழமான நம்பிக்கை முக்கியமானது. கடமைக்காக பலி, விருந்து என்று நாம் கருதிவிடக்கூடாது. எனவேதான் இத்தகையத் திருவிருந்தின் பயனாக கிறிஸ்தவக் குடும்பம், குழு, சபை அடிப்படையில் வித்தியாசமாக, சான்றாக விளங்க வேண்டும். உயிர்த்த ஆண்டவரின் உறவில் ஒன்றுபட்டிருப்போர் சாதி, இனம், மதம், மொழி, ரீதி என்ற வேறுபாடுகளுக்குக் கடுகளவும் இடம் தரக் கூடாது, அவைகளின் பின்புலத்தில் திருச்சபைகளை பிரித்தாள இடமில்லை. சுய நலத்தின் வேர்களுக்கும், கிளைகட்கும் நமக்குள் இடமில்லை. நமது நாட்டில் நாம் குறைவான விழுக்காடாக இருப்பினும், குன்றின்மீது நிற்கும் உயிர்ப்பின் ஒளியாக நாம் விளங்குவது மிகவும் முக்கியம். நாம் எதிர்சாட்சிகளாய் இருக்க இடமில்லை. புண்பட்ட மனிதகுலம் என்றாலும், உயிர்த்த ஆண்டவர் நம்மை உயிர்த்தெழ வைப்பதால், பலவீனங்கள் ஒரு சாக்குபோக்காக இடம் பெறக்கூடாது. நமது அழைப்பின் பெருமையை தாழ்ச்சியோடு இந்த நாட்டில் பறைசாற்ற அவரே நம்மை அழைக்கின்றார். அவரில் அவரோடு அவருக்காக வாழ்வோம், வெல்வோம். ●

---

**வாசகர்களுக்கு ஓர் அறிவிப்பு :** சர்வவியாபி இதழில் மரித்தோர் நினைவு செபம் பதிவு செய்ய விரும்புவோர் குறைந்தது **மூன்று வாரங்களுக்கு முன்** பதிவு செய்து கொள்ள வேண்டுகிறோம்.

**2019-2020** சர்வவியாபி சந்தாவை புதுப்பித்துக் கொள்ளவும். MO/DD/ CHEQUE/ வங்கி மூலம் செலுத்தலாம். **சந்தா எண்ணை** தவறாமல் குறிப்பிடவும். - ஆசிரியர்.

**வங்கி கணக்கு விவரம்**

| | | |
|---|---|---|
| BANK NAME | : | IOB-PONDICHERRY MAIN<br>JAWHARLAL NEHRU STREET, Pondy-1. |
| A/C Name | : | MISSION PRESS |
| A/C. No. | : | 007002000000123 IFSC :IOBA0000070 |
| தொடர்புக்கு | : | 0413 / 2334360 |



# உலக மீட்பர் காப்பியம்

பேராசிரியர், முனைவர். **ச.சாமிமுத்து,** திருச்சி.



**23-ஆம் படலம்**

மேலும் ஆண்டவர் மோசேயை நோக்கி, பார்வோன் மேலும் எகிப்தின் மேலும் இன்னும் ஒரு கொள்ளை நோய் வரச் செய்வேன். அவன் உங்களை முற்றிலும் போக விடுவதோடு இங்கிருந்து உங்களைத் துரத்தி விரட்டி விடுவான் (விப.11:1).

காப்பியப் பாடல் 1219

11 **இசுரயேல் மக்களை அடிமைநிலையிலிருந்து விடுவிக்க யாவே கடவுள் கொண்ட திருவுளத் திட்ட நேரமும் நெருங்கி வரவே, கடவுளே நேரடியாக எகிப்தில் வாதை புரிய நள்ளிரவு வேளையில் எகிப்தின் நடுவில் புறப்பட்டு வருவாரென மோசே அறிவித்தார்.**

இறைகுறித்த நேரமதும் வந்த தாங்கு,
இணைந்திருக்கும் சோதரர்கள் ஏற்கு மாறே
பொறையுருவ யாவேதாம் இறுதியாகப் (பொறை-பொறுமை)
புகன்றிட்டார், பார்வோனின் முன்னே சென்று,
நிறையிருட்டு நள்ளிரவு நேரம் தன்னில்
நேர்ந்தவரே எகிப்தினது நடுவி டந்தான், (நேர்ந்து-உடன்பட்டு)
முறைப்படியே புறப்பட்டுக் கடப்ப தற்கே
முனைப்புடனே வருவதரெனச் சொலவே சொன்னார்!

காப்பியப் பாடல் 1220

12 **ஆண்டவர் நடுஇரவில் வரும்போது பார்வோனின் தலைமகன் முதல் அடிமைப் பெண்ணின் தலைமகன்வரையும், அனைத்து எகிப்தியரின் மூத்த ஆண் பிள்ளைகள் யாவரும் சவமாகிப் போயிடுவர் என்று மேலும் மோசே கூறினார்.**

அவராங்குச் சொன்னபடி கடக்கும் போது,
அரியணையில் வீற்றிருக்கும் வேந்தன் பார்வோன்
தம்செய்தே ஈன்றதலை மகன்தொ டங்கி,
தன்னடிமைப் பெண் மூத்த மகன்வ ரைக்கும்,
உவப்புற்றே பெற்றெடுத்துப் போற்று கின்ற
உயரன்பு மூத்தமகன் என்போ ரெல்லாம்
சவமாகிப் போயிடுவார் என்றார் மோசே,
தண்டனைக்கு இனித்தப்ப முடியா தென்றார்!

காப்பியப் பாடல் 1221

13 **எகிப்தில் உள்ள அனைத்து விலங்குகளின் ஆண்பால் தலை ஈற்று அனைத்தும் இறந்து போகும். இதுவரை இருந்திராததும் இனி இருக்கப் போவதுமான பெரும்புலம்பல் எகிப்து நாடெங்கும் கேட்கும்.**

விலங்குகளின் ஆண்மூத்த ஈற்ற னைத்தும் (ஈற்று-பிறப்பு)
வீழ்ந்திறந்தே போகும்அன் றிரவில் ஆங்கே!
நலமிழந்த நாடெகிப்து என்றே ஆகும்!
நடுங்குதுயர் பெரும்புலம்பல், எழுந்தே கேட்கும்!
இலதெகிப்தில் இப்படியோர் புலம்பல் முன்னும்
என்பதுடன் பின்னுமவண் இருக்கா தென்றும்;
வலம்சுழலும் வளியதுவும் புலம்பல் ஒன்றாய் (வளி-காற்று)
வாரியிறைத் தெங்குமது பெருகச் செய்யும்!

காப்பியப் பாடல் 1222

14 **இஸ்ரயேல் மக்கள் அனைவரையும் பொறுத்தமட்டில், அங்குள்ள மனிதர்முதல் விலங்குவரை, எவருக்குமே எதிராக எந்த நாயும் குரைக்காது. இதனால் ஆண்டவர் எகிப்தியரையும் இஸ்ரயேலரையும் வேறுபடுத்திச் செயலாற்றுகிறார் என நீங்கள் உணர்ந்து கொள்வீர்கள் என்று இறைவனே மோசே மூலம் அறிவித்தார். (விப.11:7)**

இறைவனது தண்டனைதான் எகிப்தி னத்தார்
இடைபுகுந்து தாண்டவந்தான் புரியும் போது,
குறைவெதுவும் இசுரேலர் வாழ்வி டத்தில்
குமைத்தெழுந்த துயர்விளைக்க வாரா தென்றார்!
நிறையிருட்டு நேரமதில் இசுரேல் மக்கள்,
நெஞ்சதிர இழப்பொன்றும் எய்யார் என்றார்!
முறைபிறழா இசுரேலர்க் கெதிராய் நாயும்
முறைத்துகுரல் எழுப்பிடவும் செய்யா தென்றார்!

- தொடரும்..



# உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டன

- சகோ. **அ. ஆரோக்கியதாஸ்,** திண்டிவனம்.

தொடர்ச்சி...

**இந்த இயேசு யார்?** யோவான் 1:1 தொடக்கத்தில் வாக்கு இருந்தது. அவ்வாக்கு கடவுளோடு இருந்தது. அவ்வாக்கு கடவுள் தன்மை கொண்டிருந்தது. 1:14 "வாக்கு மனிதர் ஆனார்". "நம்மிடையே குடிகொண்டார்". பிலிப் 2:1-8 தம்மையே வெறுமையாக்கி.... தாழ்த்திக்கொண்டார். மனித உருவில் தோன்றி சிலுவைச் சாவை ஏற்று, மரித்து, மூன்றாம் நாள் உயிர்த்து, பல தெளிவான சான்றுகளால் உயிரோடிருப் பதைக் காண்பித்தார். இறையாட்சியைப் பற்றி கற்பித்தார். அவர்கள் கண்கள் முன்பாக அவர் மேலே எடுத்துக் கொள்ளப்பட்டார். வானத்தை அண்ணாந்து பார்த்துக் கொண்டிருந்த சீடர்களிடம் அவர் மீண்டும் வருவார் என்று வானதூதர் இருவர் சொன்னார்கள்.

சிலுவையில் தொங்கிய போது, "தந்தையே, இவர்களை மன்னியும், தாங்கள் செய்வது என்னவென்று இவர்களுக்குத் தெரியவில்லை" என்று செபித்து மன்றாடியவர், இப்போதும் விண்ணகத்தில் இறை தந்தையிடம் பரிந்துரை செய்து கொண்டிருக்கிறார்.

இயேசு இவ்வுலகில் வாழ்ந்தபோது, தனக்குப் பிறகு தன் மீட்பின் திட்டத்தை மக்களுக்கு எடுத்துச் சொல்லி, மக்கள் தூய்மை வாழ்வு வாழ தயாரிக்க தான் தேர்ந்து கொண்ட சீடர்களிடம், யோவான் 14:10 "நான் தந்தையினுள்ளும், தந்தை என்னுள்ளும் இருப்பதை நீ நம்பவில்லையா? நான் உங்களுக்குக் கூறியவற்றை நானாகக் கூறவில்லை. என்னுள் இருந்துக்கொண்டு செயலாற்றுபவர் தந்தையே, நான் தந்தையுள் இருக்கிறேன். தந்தை என்னுள் இருக்கிறார் என்று இயேசு கூறுகிறார்.

இந்த வார்த்தைகளின்படி கட்புலனாகாத கடவுளது சாயலாகவே வாழ்ந்து, மனிதர் கடவுளைக் காணும்படி செய்தவர் இயேசு. இயேசு என்ற ஒருவர் பிறக்கவில்லை என்றால், மனிதர்களின் இவ்வுலக வாழ்வில் நுழைந்து வாழ்ந்து காட்டவில்லை என்றால், மனித வரலாற்றை இருபெரும் பிரிவுகளாக பிரிக்கவில்லை என்றால், இன்றைக் கும் கடவுள் நமக்கு ஒரு கற்பனைப் பொருளாகவே இருந்திருப்பார். கற்பனையில் உருவம் செய்து, காட்சிப் பொருளாக கனம்படுத்தியிருப்போம். கடவுளைப் பற்றி அறியக்கூடியதெல்லாம் இயேசு நமக்குத் தெளிவாக எடுத்து கூறினார். கடவுளும் நமது கண்ணுக்குப் புலப்படா அவருடைய பண்புகள், அதாவது என்றும் நிலைக்கும் அவரது வல்லமை யும், கடவுள் தன்மையும் இயேசுவின் செயல்களில் தெளிவாய் தெரிகின்றன. நாம் இப்போது இயேசுவின் வாழ்க்கைக்கு பிறகு கடவுளை எனக்கு தெரியாது என்று சாக்கு போக்கு சொல்வதற்கு வழியே இல்லை. இன்னமும் மனிதர்கள் பலர் அழிவில்லா கடவுளை வழிபடுவதற்கு பதிலாக அழிந்து போகும், மனிதரைப் போலவும், பறப்பன, நடப்பன, ஊர்வன ஆகியவற்றைப் போலவும் உள்ள உருவங் களையே வழிபடுகின்றனர். இயேசுவை இறைமகனாக ஏற்க தயங்குகிறார்கள்.

யோவான் 16:12 "நான் உங்களிடம் சொல்ல வேண்டியவை இன்னும் பல உள்ளன. ஆனால் அவற்றை இப்போது உங்களால் தாங்க, புரிந்துகொள்ள, இயலாது. உண்மையை வெளிப்படுத்தும் தூய ஆவியார் வரும் போது, அவர் முழு உண்மையை நோக்கி உங்களை வழி நடத்துவார்" என்றார் இயேசு. 16:7, நான் போகாவிட்டால் துணையாளர் உங்களிடம் வரமாட்டார். நான் போனால் அவரை உங்களிடம் அனுப்புவேன். அவர் வந்து பாவம், நீதி, தீர்ப்பு ஆகியவை பற்றி உலகினர் கொண்டுள்ள கருத்துகள் தவறானவை என எடுத்துக்காட்டுவார்", என்றார் இயேசு.

- தொடரும்..



# பெந்தக்கோஸ்து - திருச்சபையின் பிறந்த நாள்!

பொறிஞர். ஞா.ஆண்டோ, புதுச்சேரி

இயேசுவின் விண்ணேற்றம் திருத்தூதர்கள் வழியாக இயேசு செய்து வந்த மீட்பு பணியின் தொடர்ச்சியாகும் . பெந்தக் கோஸ்து என்பது தூய ஆவியின் வல்லமையால் இப்பணியை நீட்டிப்பதாகும். நிறைவேற்றப்பட்ட உறுதிமொழிகளின் வெளிப்பாடே பெந்தக்கோஸ்து ஆகும். பெந்தக்கோஸ்து என்னும் சொல்லுக்கு ஐம்பதாவது நாள் என்று பொருள். பெந்தக்கோஸ்துவைப் பற்றி திருத்தூதர் பணிகள் இரண்டாம் அதிகாரத்தில் விரிவாக விளக்கப்பட்டுள்ளது.

12 சீடர்கள் மரியாள் இவர்களோடு சுமார் 120 பேர் கூடியிருந்தபோது பேதுரு மறை நூல் வாக்கு நிறைவேறியது என பேசினார்.

திப. 2-17 -இல் “இறுதி நாள்களில் நான் மாந்தர் யாவர் மேலும் என் ஆவியைப் பொழிந்தருள்வேன். உங்கள் புதல்வரும் புதல்வியரும் இறைவாக்கு உரைப்பர். உங்கள் இளைஞர்கள் காட்சிகளையும் உங்கள் முதியோர் கனவுகளையும் காண்பர்” எனக் கூறப்பட்டுள்ளது.

பேதுருவின் உரையைக் கேட்டு பலர் மனம் மாறி திருமுழுக்குப் பெற்றார்கள்.

யோவான் 20:19-23 வரை பெந்தகோஸ்துவைப் பற்றி விளக்குகின்றது. இயேசு சீடர்கள்மேல் ஊதி “தூய ஆவியைப் பெற்றுக் கொள்ளுங்கள்” என்று கூறுகிறார் . (யோவா.20-22).

தந்தையிடமிருந்து இயேசு அனுப்பிய துணையாளர்தான் தூய ஆவி. (யோவா. 15-26).

தூய ஆவியார் சாதாரண அப்பத்தையும் இரசத்தையும் சக்திவாய்ந்த நற்கருணையாக மாற்றுகிறார். தூய ஆவியின் துணையால் நாம் வாழ்கிறோம்.

இயேசுவின் சீடர்கள் யூதர்களுக்கு அஞ்சி தாங்கள் தங்கிருந்த இடத்தின் கதவுகளை மூடிவைத்திருந்தார்கள்.( யோவான் 20-19) மற்றும் திப 2:11 என்ற வரிகள் சீடர்கள் ஒன்று கூடியிருந்த புதிய ஏற்பாட்டுக் காட்சிகள் ! லேவி.23:15-21 மற்றும் எண். 28:26-31 ஆகிய பகுதிகளில் அறுவடைப் பெருவிழா மற்றும் கூடாரத் திருநாளில் யூதர்கள் கூடியிருந்த பழைய ஏற்பாட்டுக் காட்சிகள்.

இவையெல்லாம் திருச்சபையின் தோற்றத்திற்கான முன்னோட்டங்கள்.

“உம் ஆவியை நீர் அனுப்ப அவைப் படைக்கப் பெறுகின்றன. மண்ணகத்தின் முகத்தைப் புதுப்பிகின்றீர்” (திபா.104-30) மற்றும்

“ஆண்டவரே ! உம் வேலைப்பாடுகள் எத்தனை எத்தனை! நீர் அனைத்தையும் ஞானத்தோடு செய்துள்ளீர்” (திபா.104-24) ஆகிய வசனங்கள் தூய ஆவியின் வியத்தகு செயல்களைத் தெளிவுபடுத்துகின்றன.

பெந்தக்கோஸ்து என்பது தேவ அன்னையின் மீதும் திருத்தூதர்கள் மீதும் நெருப்புபோன்ற பிளவுள்ள நாக்கு வடிவத்தில் தூய ஆவி இறங்கி வந்தார் எனும் நிகழ்ச்சியைக் குறிக்கின்றது.

சீடர்கள் அனைவரும் தூய ஆவியினால் ஆட்கொள்ளப்பட்டு அவரின் தூண்டுதலால் அவர்கள் ஒவ்வொருவரும் வெவ்வேறான மொழிகளில் பேசத் தொடங்கினார்கள். (திபா.2-4) இப்படித்தான் திருச்சபையின் தோற்றம் அமைந்திருந்தது.

அன்னை மரியாள் தன் அன்புப் பிள்ளைகளாம் குருக்களுக்குப் பல செய்திகளை அருட்திரு ஸ்டெவானோ கோப்பி என்பவருக்கு வெளிப்படுத்தியுள்ளார். அந்தச் செய்திகளில் பெந்தக்கோஸ்து பற்றி இடம் பெற்றுள்ள செய்திகளைப் படித்து தியானித்து வாழ அழைக்கப் படுகின்றோம்.

செய்தி 226 - இல் “பரிசுத்து ஆவியே! எழுந்தருளி வாரும்” என்று கூறவேண்டும் என்று பணிக்கிறாள்.

பரிசுத்த ஆவியின் பிரியமுள்ள பத்தினி மரியாள் ஆகும். இதனால் பிதாவிடமிருந்தும் சுதனிடமிருந்தும் நமக்கு அன்பின் ஆவியானவரை அபரிதமாக பெற்றுத் தருபவர் மரியாளே.

மரியாள் ஆவியானவரை அபரிதமாக பெற்றுத் தருபவரானதால் அவர் புதிய பெந்தக்கோஸ்தைப் பற்றி முன் மொழிந்துவிட்டார்.

“உலகம் முழுவதையும் தூய்மையாகவும் புதுப்பித்து ஒப்புக்கொடுக்கும் ‘தெவ்வீகத் தீ’யாக அது இருக்கும்” என செய்தி 355 இல் அன்னை குறிப்பிடுகிறார். இந்த ‘தெவ்வீகத் தீ’யால் திருச்சபை புதுப்பிக்கப்படும். மறுவடிவம் பெறும். இவ்வன்பின் நெருப்பினால் உலகம் முழுவதும் புதிதாக்கப்படும்.’(செய்தி 226).

இந்த தெய்வீக ஆவியானவரை அவரது மாசற்ற இருதயத்திலிருந்து பெற்றுக்கொள்ள நம்மை ஆயத்தமாக இருக்கச் சொல்கிறார் .

இயேசுவைக் கண்ணால் கண்ட சீடர்கள் - திருத்தூதர்கள் இறந்துவிட்டார்கள். ஆகவே இயேசுவுக்கும் கிறிஸ்தவச் சமூகத்திற்கும் இருந்த உறவுப் பாலம் தகர்ந்துவிட்டது என்ற அச்சம் ஏற்பட்டது இயல்பானதே. ஆனால் தூய ஆவியாம் துணையாளர் தொடர்ந்து வழி நடத்துகிறார். நற்கருணை வழியாக தம் முழுமையான அருளைக் கொடுத்து நம் ஒவ்வொருவரையும் தன்னுடைய கோவிலாக மாற்றிவிடுகிறார். 1கொரி.3:16 -இல் “ நீங்கள் கடவுளுடைய கோவிலென்றும் கடவுளின் ஆவியார் உங்களில் குடியிருக்கிறார் என்றும் உங்களுக்குத் தெரியாதா?” என்ற வசனத்தின் வாயிலாக அறியலாம்.

“இன்று உலகம் முழுவதும் சத்தியத்தின் முழுமைக்கும் இயேசுவின் சுவிசேஷத்திற்கும் கிறிஸ்துவின் சித்தப்படியும் அவரால் நிறுவப்பட்டதுமான ஒரே திருச்சபைக்குக் கொண்டுவரப்படவேண்டும் . இது பரிசுத்த ஆவியானவராலே அடையப்பெறும்.” (செய்தி 226) எனும் பரிசுத்த மரியாளின் விருப்பத்தை நிறைவேற்ற - தூய ஆவியாரின் கனியான – அன்பு மகிழ்ச்சி அமைதி பொறுமை பரிவு நன்னயம் நம்பிக்கை கனிவு மற்றும் தன்னடக்கம் ஆகியவற்றைப் (கலா.5-22). பின்பற்றுவோம். ●

---

**குடிபெயர்ந்தவர்கள், பணமாக பயன்படுத்தப்படக் கூடாது:** குடிபெயர்ந்த நம் சகோதர சகோதரிகள், பணமாக ஒருபோதும் பயன்படுத்தப்படக் கூடாது என்று, மெக்சிகோ கத்தோலிக்க ஆயர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர். சுங்கவரி மற்றும், குடிபெயர்தல் கொள்கை குறித்து, அமெரிக்க ஐக்கிய நாட்டிற்கும், மெக்சிகோ நாட்டிற்கும் இடையே ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளதையொட்டி, மெக்சிகோ ஆயர் பேரவை சார்பாக வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவித்துள்ளது. இந்த ஒப்பந்தம், அனைத்து மனிதர்களும் சமமானவர்கள் என்ற உரிமையை ஏற்று, அவர்களைப் பாதுகாக்க வேண்டும் என்ற, நம் பொதுவான உறுதிபாட்டிற்கு ஒத்ததாக இல்லை என்று கவலை தெரிவித்துள்ள ஆயர்கள், குடிபெயர்ந்த நம் சகோதரர் சகோதரிகள் எல்லாரும், உண்மையான மனிதாபிமானத்தோடு வரவேற்கப்படவில்லை என்றும் குறை கூறியுள்ளனர். நாட்டின் தெற்கு எல்லையில், ஆறாயிரம் தேசிய பாதுகாப்பு காவலர்களை அமர்த்தும் திட்டம், குடிபெயர்வுக்குரிய உண்மையான காரணங்களைக் களைவதாக இல்லை என்றும் ஆயர்கள் கூறியுள்ளனர்.

*-வத்.செய்தி.*

131 இளம் உள்ளங்களுக்கு

## கொள்கைகளுக்கப்பால்



– B.மேரி ராபர்ட் சாந்திதாஸ், புதுவை–1.

**இங்கர்சால்:** இங்கர்சால் கருத்துரிமைகளின் பொற்கால மாகத் திகழ்ந்த 19-ம் நூற்றாண்டில் வாழ்ந்த சிறந்த அமெரிக்க எழுத்தாளர், பேச்சாளர், வழக்கறிஞர், அரசியல் தலைவர் மற்றும் எதார்த்த நாத்திகவாதி.

**வித்தியாசமான நட்பு:** இங்கர்சாலுக்கும் பிலிப்ஸ் என்ற பாதிரியாருக்கும் இடையே அவர்களுடைய கொள்கை களுக்கும் அப்பாற்பட்ட நட்புறவு இருந்தது. பாதிரியார் பிலிப்ஸ் சிறந்த கிறிஸ்துவ மதப்போதகர். இங்கர்சால் பழுத்த நாத்திகவாதி. ஆனாலும் அவர்களுடைய கொள்கை கோட் பாடுகளுக்கும் அப்பாற்பட்ட நிலையான நட்புறவு இருந்தது.

**பாதிரியாரை பார்க்க வந்த இங்கர்சால்:** பாதிரியார் பிலிப்ஸ் படுத்த படுக்கையாக இருந்தார். அவரை பார்க்க பலர் வந்தனர். ஆனால் பாதிரியார் தன்னை பார்க்க யாரையும் அனுமதிக்க வில்லை. இந்நிலையில், நாத்தியகவாதியான இங்கர்சால் பாதிரியாரை பார்க்க வந்தார். பலரும் பாதிரியார் இங்கர்சாலை பார்க்க சம்மதிக்கமாட்டார் என்றே கருதினார்கள். ஆனாலும் பாதிரியார் இங்கர்சாலை மட்டும் உள்ளே வர அனுமதித்தார்.

**பாதிரியார் தந்த விளக்கம்:** உள்ளே சென்ற இங்கர்சால், பாதிரியார் தன்னை பார்க்க யாரையும் அனுமதிக்கவில்லை என்றும், தன்னை மட்டுமே அனுமதித்துள்ளார் என்பதையும் அறிந்து ஆச்சரியத்துடன் இதுபற்றி பாதிரியாரிடமே கேட்டு விட்டார். உடனே பாதிரியார் பிலிப்ஸ், “நான் என்னுடைய மற்ற நண்பர்களை மோட்சத்திலே சந்திப்பேன். ஆனால் தங்களைக் காண்பது இதுதான் கடைசி முறையாக இருக்கும் என்று எண்ணுகிறேன்” என்று நாத்திகரான இங்கர்சால் மோட்சத்திற்கு வரமுடியாதே என்று நாசுக்காக சுட்டிக்காட்டினார். ●

---

**போலந்து நாட்டின் 108 மறைசாட்சிகளின் நினைவு:** இரண்டாம் உலகப்போர் நிகழ்ந்த வேளையில், போலந்து நாட்டில் மறைசாட்சிகளாக உயிர் துறந்த 108 அருளாளர் களை, போலந்து ஆயர் பேரவை, ஜூன் 12, இப்புதனன்று சிறப்பித்தது என்று, அந்நாட்டு ஆயர் பேரவையின் செய்திக் குறிப்பு கூறுகிறது. 1939ம் ஆண்டு முதல், 1945 ம் ஆண்டு முடிய நாசி வதை முகாம்களிலும், வேறு பல வழிகளிலும் கொல்லப்பட்ட இந்த மறைசாட்சிகளை, 1999ம் ஆண்டு, ஜூன் 13 ம் தேதி, திருத்தந்தை புனித 2ம் ஜான்பால் அவர்கள், வார்சா நகரில் அருளாளர்களாக உயர்த்தினார். கொல்லப்பட்ட 108 மறைசாட்சிகளில், மூவர் ஆயர்கள், 52 பேர் அருள் பணியாளர்கள், 29 ஆண் துறவிகள், 8 பெண் துறவிகள் மற்றும் ஒன்பது பொதுநிலையினர் அடங்குவர். இவர்களில், 20 வயதான Jarogniew Wojciehowski என்ற இளையவர் வயதில் மிகக் குறைந்தவர் என்பதும், இவரைப்போலவே, 20 முதல் 28 வயதுடைய 6 இளையோர் மறைசாட்சிகளாகக் கொல்லப் பட்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கன. கருவுற்றிருந்த ஓர் இளம் தாய் வதை முகாமில் கொல்லப்படுவதற்கு தேர்ந்தெடுக்கப் பட்ட வேளையில், அவருக்குப் பதிலாக, அவரது மாமியாரான Marianna Biernacka என்ற 55 வயதுடைய பெண்மணி தன்னையே கொலையாளிகளிடம் கையளித்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. இவர்கள் அருளாளர்களாக உயர்த்தப்பட்ட 20ம் ஆண்டு நிறைவு, ஜூன் 13, இவ்வியாழனன்று சிறப்பிக்கப் பட்டது. *-வத்.செய்தி.*

## சுயமாக சிந்தித்து செயல்படு



– G. *போனிஃபாஸ் ஜூலியன்*, புதுவை–9.

ஒரு கிராமத்தில் புதிதாக திருமணமான தன் மகளை, கணவருடன் பட்டணத்தில் உள்ள அவருடைய வீட்டிற்கு வழியனுப்பி வைத்தார்கள். சரியான போக்குவரத்து வசதிகள் இல்லாததினால் ஒரு கழுதைமேல் இருவரையும் அமரச்செய்து அனுப்பினார்கள். அவர்கள் செல்ல வேண்டிய இடம் ஒரு சில மைல்கள்தான். தன் பெற்றோரிடம் விடை பெற்றுக்கொண்டு மகளும், மருமகனும் கழுதையின் மேல் அமர்ந்துகொண்டு பயணத்தை தொடங்கினார்கள். பெற்றோர்கள் வெறுமனே அவர்களை அனுப்பி வைக்கவில்லை. சில பொருள்களோடு நல்ல அறிவுரைகளையும் கூறி அனுப்பினார்கள். தன் வீடு போல் அங்கு அமையாது என்றும் எல்லாவற்றும் ஒத்துழைத்து போக வேண்டும் என்பது முக்கியமான அறிவுரை. இருவரும் கழுதையின் மீது வந்து கொண்டிருந்த போது ஒரு சிலர் பார்த்து இது என்ன நியாயம் கழுதையின் மேல் இருவர் உட்கார்லாமா என்று விமர்ச்சித்தார்கள். உடனே கணவன் இறங்கி விட்டான். இப்போது மனைவி மட்டும் கழுதையின் மீது அமர்ந்துகொண்டு பயணம் செல்கிறாள். சிறிது தூரம் சென்றவுடன் வேறு சிலர் இந்தப் பெண் எப்படி தன் கணவனை நடக்க வைக்கலாம் என்று கூறினார்கள். உடனே பெண்கீழே இறங்கி விட்டாள். கணவன் கழுதையின் மேல் உட்கார்ந்து கொண்டான். இன்னும் சிறிது தூரம் சென்றவுடன் பெண்ணை நடக்க வைத்துவிட்டு ஆண் உட்கார்ந்து செல்கிறானே என்று புலம்பினார்கள். அவனும் இறங்கிவிட்டான். இருவரும் யோசித்து ஒரு முடிவுக்கு வந்தார்கள். இருவரும், நடந்து செல்ல கழுதையை ஓட்டிக் கொண்டு சென்றார்கள். கடைசியாக இவர்களைப் பார்த்த அந்த பகுதி மக்கள் இந்த இருவருக்கும் மூளை இல்லையா, கழுதையின் மீது உட்கார்ந்து கொண்டு போகலாமே என்று அங்கலாயித் தார்கள். எல்லோருடைய பேச்சைக் கேட்ட இவர்கள் என்ன செய்யலாம் என்று யோசித்து சிறிது நேரம் அங்கேயே இருந்தார்கள், பின்பு முன்பு வந்தது போல் இருவரும் கழுதையின் மீது அமர்ந்து தன் ஊருக்குள் நுழைத்தார்கள். இதில் யாருடைய கருத்தை ஏற்பது என்று அவர்களுக்குத் தெரியவில்லை. பலரும் பலவிதமான கருத்துகளைக் கூறி இந்த இளம் தம்பதியினரை ஒரு வழி ஆக்கிவிட்டார்கள்.

இதுதான் இன்றைய உலக போக்கு. கட்டின வீட்டிற்கு பலர் நோட்டம் கூறுவார்கள் என்று சொல்வார்கள். பலருடைய கருத்துகளை கேட்பது தவறல்ல. ஆனால் அனைத்தையும் ஏற்று செயல்படுவது கடினம். கடவுள் ஒவ்வொருக்கும் சுய அறிவு கொடுத்திருக்கிறார். எது நல்லது? எது கெட்டது என்று நமக்குத் தெரியும். நாம் ஒவ்வொருவரும் நம்முடைய சொந்த அறிவை பயன்படுத்தி நல்வழியை தேர்ந்தெடுக்க வேண்டும். சமுதாயத்தில் இரண்டு விதமான மக்கள் இருக்கிறார்கள். ஒருவகை, மற்றவர்களை எப்போதுமே, நற்புத்திகளைக் கூறி நல்ல வழிகளைக் காட்டி கொண்டு இருப்பார்கள். அடுத்த வகையானவர்கள் சுயநலவாதிகள், தாங்கள் தங்கள் குடும்பம் மட்டும் சிறப்பாக வாழ வேண்டும். மற்றவரை பற்றி கவலைப்பட மாட்டார்கள். இவர்கள் மற்றவர்களுக்கு கூறும் அறிவுரைகள் ஏற்புடையதாக இருக்காது. ஒரு பொருளை வாங்கினால் அது எங்கே வாங்கப்பட்டது, எவ்வளவு விலை என்று கூறமாட்டார்கள். ஏனென்றால் மற்றவர்கள் அதே பொருளை வாங்கி விடுவார்கள் என்று எண்ணுவார்கள். இவ்விதமான கீழ்த்தரமான எண்ணங்களை சமுதாயத்தில் வளரவிடக் கூடாது. இதற்கெல்லாம் ஒரே வழி ஜெபம். கடவுளைப் பார்த்து வேண்டும் போது தூய ஆவியின் ஏவுதலால் நமக்கு நல்ல வழி கிடைக்கும். இந்த முறையை பின்பற்றுவோம், நல்ல முடிவெடுத்து வாழ்வோம். ●

**இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் ஒளியில் கிறிஸ்தவக் கல்வி பற்றிய அறிக்கை**

Declaration on Christian Education.

*– சகோ. மரிய சலேத், சென்னை.*

கல்வி முக்கியமானதொன்று என்பதை உணர்ந்து ஒவ்வொரு மனிதரின் உடல், உள வளர்ச்சிக்கும், அறநெறி வாழ்வுக்கும் உதவு வகையில் கல்வி அமைய வேண்டும் என கிறிஸ்தவக் கல்வியின் பேராவணம் (Magna Charta) இவ்வேடு விளக்குகிறது. எல்லாவிதக் கல்வியும் மனிதரைச் சமூக வாழ்வில் பங்கெடுக்கவும், ஒழுக்கநெறியின் மதிப்புகளை மனச்சான்றின் ஒளியில் ஆய்ந்து வாழ்வில் கடைப்பிடிக்க வழிகாட்டுகிறது. எனினும் கிறிஸ்தவக் கல்வி, நம்பிக்கை எனும் கொடையை ஆழமாக புரிந்து உணர்ந்து செயல்படுவதற்குத் துணிபுரிய வேண்டும் என்பது இந்த ஏடு விடுக்கும் வேண்டுகோள். இன்று விழிப்புணர்வுக் கல்வி மிகவும் தேவையாகும். கல்வி மனிதருடைய வாழ்வில் மாண்பையும், பொறுப்பையும் உணரச் சமூக வாழ்வில் பங்குக்கொள்ளவும் செய்கிறது. கல்வி வளர்ச்சி யிலும், விரிவாக்கத்திலும், திருச்சபைக்குத் தனிப்பட்டதொரு பொறுப்பு உண்டு. எனவே கல்வி, மனிதரின் வாழ்க்கை இலக்கிற்குப் பொருந்தியதாகவும் ஒற்றுமையும், அமைதியை வளர்க்கவும், சகோதர உறவு கொள்ள வழிவகுக்கவும், தங்கள் உடல், ஒழுக்க அறிவுப் பண்புகளை வளர்க்கவும், துணிச்சலையும் விடாமுயற்சி யையும் உண்மை சுதந்திரத்தையும் பொறுப்புணர்வையும் கொண்டுவர வேண்டும் என்று விருப்புடன் செயலாற்றுகின்றது.

“கிறிஸ்துவக் கல்வி” எனும் அறிக்கை 12 எண்களை கொண்ட சிறிய ஏடு. கிறிஸ்தவக் கல்வி பெறும் உரிமை எல்லாக் கிறிஸ்தவர் களுக்கும் உண்டு. இது மக்களின் அருட்பணியாளரின் முக்கிய கடமை. இவ்வேடு, பெற்றோர்களின் பொறுப்பும், கடமையும், ஒழுக்கம் மற்றும் சமய பயிற்சி மறைக்கல்வி, பல்கலைக் கழகங்களும், துறைகளும், கட்டமைப்புகள் இவைகளைப் பற்றி விளக்குகிறது.

1) பெற்றோர் தம் பிள்ளைகளுக்கு உயிர் அளித்திருக் கிறார்கள். எனவே பிள்ளைகளுக்கு கற்பிக்க வேண்டியது தலை யாயக் கடமை அவர்களுக்குரியது. கல்வி கற்பிக்கும் பொறுப்பு முதல் முதலில் குடும்பத்தையே சார்ந்தது. அவர்களே குழந்தை களின் முதன்மையான முக்கிய ஆசிரியர்கள் ஆவர் (எண் 3).

2) கல்விக் கூடங்களில் ஆசிரியர்கள், பொறுப்பாளர்கள், தம் வாழ்க்கையால் சான்று பகர்ந்து, நிறைவாழ்வுப் போதனையைப் படிப்பித்து, அருள்வாழ்வு சார்ந்த உதவி அளிக்க வேண்டும். ஆசிரியர்கள் தங்களுடைய பணிக்குத் தனிப்பட்ட அக்கறையுடன் தயாரித்து, உலகியல் அறிவு, சமய அறிவு இவற்றில் தேர்ச்சிபெற்று இப்பணி ஓர் உண்மையான திருத்தூதுப் பணி எனவும், சமுதாயத்திற்கு செய்யப்படும் ஓர் உண்மை சேவை எனவும் திருச்சங்கம் அறிக்கையிடுகிறது (எண்.7,8).

3) கத்தோலிக்கக் கல்விக் கூடங்களில் செல்வமற்ற ஏழைகள், குடும்ப ஆதரவோ, அன்பே இல்லாதவர்கள், நம்பிக்கை எனும் அருள் கொடையினின்று அகன்றிருப்போர். ஆகியோருக்கு, திருச்சபையின் அருள்பணியாளர்களும், அனைத்துக் கிறிஸ்தவர் களும் தியாகம் செய்ய முன்வந்து உதவிட வேண்டுமெனத் திருச்சபை வற்புறுத்தி வேண்டுகிறது (எண்.9)

4) கத்தோலிக்கப் பல்கலைக் கழகங்களில் பயிலும் மாணவர்களின் அருள் வாழ்வில் மட்டும் அதிக அக்கறை காட்டினால் போதாது, மாறாகத் தங்களுடைய எல்லாப் பிள்ளைகளின் அறநெறி சார்ந்த பயிற்சிக்கு ஏற்பாடு செய்ய வேண்டும் (எண்.10)

5) கத்தோலிக்கக் கல்விக் கூடங்களிடையே தகுந்த ஒருங்கமைப்பை வளர்க்கவும், மனித சமூகம் முழுவதின் நலனுக்காக ஒத்துழைப்பை ஊக்குவிக்க எல்லா முயற்சிகளும் செய்ய வேண்டும் (எண்.12). ●

**இலங்கை: கொச்சிக்கடை புனித அந்தோனியார் திருத்தலம் திறப்பு:** இலங்கையின் கொழும்பு நகரில், உயிர்ப்புப் பெருவிழாவன்று பயங்கரவாதத்தால் தாக்கப்பட்ட கொச்சிக் கடை புனித அந்தோனியார் திருத்தலம், ஜூன் 12, இப்புதன் மாலையில் அர்ச்சிக்கப்பட்டு, பொது மக்களுக்கு மீண்டும் திறக்கப்பட்டுள்ளது. ஜூன் 13, காலை புனித அந்தோனியார் விழாத் திருப்பலியும் நிறைவேற்றப்பட்டுள்ளது. இவ்விரு நிகழ்வுகளையும், தலைமையேற்று நிகழ்த்திய கொழும்பு பேராயர், கர்தினால் மால்கம் இரஞ்சித் அவர்கள், இங்கு நிகழ்ந்த பயங்கரவாதத் தாக்குதல்களுக்குப் பலியானவர்கள் எல்லாரும், புனிதர்கள் என்றும், அவர்களையும், அவர்களின் உறவுகளையும், ஒவ்வொரு நாளும் நாம் நினைவுகூர்வோம் என்றும் கூறினார். இத்திருப்பலியில் எடுக்கப்படும் காணிக் கைகள் அனைத்தும், அக்குடும்பங்களின் நல்வாழ்வுக்காகச் செலவழிக்கப்படும் என்றும் உரைத்த, கர்தினால் இரஞ்சித் அவர்கள், மனித வாழ்வைவிட விலையேறப்பெற்றது எதுவு மில்லை என்றும், அடுத்தவருடைய உயிரைப் பறிப்பதற்கு எவருக்கும் உரிமை கிடையாது என்றும் மறையுரையாற்றினார்.

ஒவ்வொரு மனித வாழ்வும் மதிப்பிற்குரியதே என்றும், அரசியல் இலக்குகளை எட்டுவதற்காக, மனித வாழ்வு பயன்படுத்தப்படுவதை முற்றிலும் புறக்கணிக்கின்றோம் என்றும், தாக்குதல்களை நடத்தியவர்களுக்கு விண்ணகத் தில் இடமில்லை அரசியல் இலக்குகளை எட்டுவதற்காக, மனித வாழ்வு பயன்படுத்தப்படுவதை முற்றிலும் புறக்கணிக் கின்றோம் என்றும், தாக்குதல்களை நடத்தியவர்களுக்கு விண்ணகத்தில் இடமில்லை என்றும், கர்தினால் இரஞ்சித் அவர்கள் கூறினார். முதுகெலும்பு உள்ளவர்கள், தவறுகள் இழைக்காதவர்கள், தவறுகள் செய்பவர்களைப் பாதுகாக் காதவர்கள், மற்றும் தங்கள் மத்தியில் தவறு செய்பவர் களைத் தண்டிப்பதற்கு நடவடிக்கை எடுக்கும், நேர்மையான அரசியல்தலைவர்கள் இலங்கை நாட்டிற்குத் தேவை என்றும், கர்தினால் இரஞ்சித் அவர்கள் கூறினார். நேர்மையான சமுதாயத்தை உருவாக்க வேண்டியது அரசியல் தலைவர் களின் கடமை என்பதையும் இலங்கை கர்தினால் வலியுறுத்திக் கூறினார். புனித அந்தோனியார் திருத்தலத்தை இலங்கை கடற்படை பழுது பார்த்துள்ளது. இங்கு ஏப்ரல் 21 ம் தேதி இங்கு நடத்தப்பட்ட தற்கொலை குண்டுவெடிப்பு தாக்குதலில் 54 பேர் உயிரிழந்தனர். - *(AsiaNews)*

## விண்ணக வாழ்வின் 9- ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



என் ஜீவியத்தில் என்னை நேசித்தவர்களே
மரணத்திலும் என்னை மறவாதீர்கள்.

இவரது ஆன்ம இளைப்பாற்றிக் காக 25-06-2019 வெள்ளயம் பலம், புனித அந்தோனியார் ஆலயத்தில் செவ்வாய்க்கிழமை மாலை 6.00 மணிக்கு திருப்பலி நிறைவேற்றப்படும்.

திரு M.P. **மெரின் கிறிஸ்டோ பால்**

**தோற்றம்: 18-12-1990**

**மறைவு: 25-06-2010**

பிரிவால் வாடும்

**அப்பா, அம்மா, பெரியம்மா, அக்கா, அத்தான், பிள்ளைகள், மற்றும் உறவினர்கள் அன்பு உள்ளங்க**

# திருவழிபாட்டில் பொதுநிலையினரின் பங்கேற்பு



- பேராசிரியர் அ. குழந்தைராஜ், காரைக்குடி.

இரண்டாம் வத்திக்கான் சங்க ஏட்டின் முதல் ஏடு "திருவழிபாடு" பற்றியதாகும். வாழ்வின் ஊற்றும் உச்சயுமான திருவழிபாடு ஒரு கிறிஸ்தவனின் உயிர்நாடி. அது உடல், ஆன்மா. ஆவி அனைத்திற்கும் அருமருந்து. சங்க ஏட்டின் முதல் வாக்கியம் கூறுவது என்ன? "கிறிஸ்தவ மக்களிடையே கிறிஸ்தவ வாழ்வை நாளுக்கு நாள் வளப்படுத்த வேண்டும். மாற்றங்களுக்கு உட்பட்ட அமைப்புக்களை இக்காலத் தேவைகளுக்கு ஏற்ப நன்முறையில் தழுவி அமைக்க வேண்டும்...." திருவழிபாடு திருச்சபையின் செயல்களை உள்ளடக்கிய சிகரமாக உள்ளது. நம்பிக்கையாலும் திருமுழுக்காலும் கடவுளின் பிள்ளைகளாகிய நாம் முழுப்பயனை அடைய வேண்டுமென்றால் சரியான மனநிலையோடு திருவழிபாட்டில் கலந்துகொள்ள வேண்டும்.

வழிப்பாட்டிற்குரிய ஒட்டு மொத்தப் பொறுப்பு பொது நிலையினரையே சாரும். பாரம்பரிய வழிபாட்டு முறைகளை மாற்றி, 'ஏதோ பூசை பார்த்தோம்' என்ற நிலையிலிருந்து 'பூசையில் பங்கேற்றோம்' என்று சொல்லும் அளவுக்கு இரண்டாம் வத்திக்கான் சங்கம் வழிவகை செய்துள்ளது. சங்கத்தின் போதனைகளை கடந்த 40 ஆண்டுகளாக பரவலாக்கப்படாமல் இருந்தது ஒரு மாபெரும் தவறு. தற்போது 10-15 ஆண்டுகளாக அங்கொன்றும் இங்கொன்றுமாக பொதுநிலையினரின் ஈடுபாடு, அதிகரித்துள்ளது. நற்செய்திக் கூட்டங்கள், முழு இரவு ஜெபம், அன்பியங்கள், பல்வேறு பணிக்குழுக்களின் செயல்பாடுகள், திருவழிபாட்டில் ஈடுபாட்டை சற்று அதிகரித்திருக்கிறது. ஆனால் தற்போது அசுரவேகத்தில் வளர்ச்சி பெற்றவரும் கணினியுகத்தில் இன்னும் ஈடுபாடு அதிகமாக வேண்டும் என்ற பரவலான கருத்துப் பரவியுள்ளது.

1) 1973 ஆம் ஆண்ட வெளியிடப்பட்ட 'சிறுவர்களுக்கான நற்கருணை' ஒரு புதிய கருத்தியலை அறிமுகம் செய்து வைத்தது. சிறுவர்களின் உளவியல், வாழ்வு, வளர்ச்சி, எதார்த்தம் அறிவுத்திரன், செயல்பாடுகள் போன்றவைகளுக்கு அடிப்படையாக திருவழிபாட்டுக் கொண்டாட்டங்கள் நடைபெறுகின்றன. ஒரு திருவழிபாட்டு நிகழ்ச்சினையே பல்வேறு விதமாகக் கொண்டாட வாய்ப்புகள் உள்ளன. இந்தத் திருப்புமுனைகள் பொது நிலையினரை மையப்படுத்த ஏற்படுத்தப்பட்டுள்ளன. திருவழிபாடு என்பது பொது வழிபாடு (Public worship) அது ஒரு சமூகக் கொண்டாட்டம் (Community Clebration) அது ஒரு குடும்பக் கொண்டாட்டம் (Family Celebration).

"பாலஸ்தீனத்தில் கிறிஸ்தவம் எனும் மீட்புப் பிறந்தது. சுற்றுவட்டாரங்களில் அது நற்செய்தியாக மாறியது. ரோம் நகரில் அது வாழ்வியல் ஏற்றம் பெற்றது. ஐரோப்பாவில் அது கலாச்சாரமானது. அமெரிக்காவில் ஸ்டைலாக மாறி, இன்று இந்தியாவில் ஒரு தொழிலாக மாறிவிட்டது" கிறிஸ்தவம் எங்கோ போய்க் கொண்டிருக்கிறது.

வழிபாட்டு முறைகளில் கத்தோலிக்கக் கிறிஸ்தவ முறைக்கு ஈடாக இணையாக வேறு எந்த மதத்திலும் பொதுமக்களின் ஈடுபாடு இருப்பதில்லை. அவர்களின் வழிபாடு One way traffic. பக்தர்கள் தேங்காய் பழம் கொடக்க பூசாரிகள், குருக்கள் சாமிக்கு பக்தரின் பெயரால் அர்ச்சனை செய்கின்றனர். சில சமயங்களில் பக்தர்களிடம் யார் பேருக்கு அர்ச்சனை செய்ய வேண்டும் என்று குருக்கள் கேட்கும் போது சாமி பேருக்கே செய்துவிடுங்கள் என்று சொல்பவர்கள் ஏராளம் தான் என்ன காரிய அனுகூலத்திற்கு என்ன வேண்டுதல்களுக்கு கோவிலுக்கு போகிறோம் என்பதே தெரியாதவர்கள்.

தர்காக்களுக்குப் போனால் பையில் கைவிடாத அளவுக்கு "பக்தர்களை ஒரு பாத்தியா" ஒத இழுத்துக் கொண்டு செல்பவர்களும் உண்டு. ஆனால் முழுக்க முழுக்க எந்த பொருளாதாரச் சுமையும் கட்டுப்பாடின்றியும் இறைத்தந்தையை இயேசு வழியாக ஆவியானவரின் ஆற்றலோடு ஜெபித்திட நமது திருவழிபாட்டு முறையே சிறந்ததாகும்.

இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகளின் 16 தொகுப்புகளின் நிறை குறைகளை வாக்கெடுப்பின் மூலம் ஆயர்கள் தேர்வு செய்தபோது மற்ற எந்த ஏட்டுக்கும் இல்லாத அளவில் 3005 ஆயர்கள் பொதுநிலையினரின் திருத்தூதுப்பணி பற்றிய விதித் தொகுப்புக்கு ஆதரவாக வாக்களித்தனர். இதிலிருந்து நாம் தெரிந்து கொள்வது என்னவெனில், பொதுநிலையினர் தாம் இனி திருச்சபை பல்வேறு பரிணாமங்களில் வளர்க்கவேண்டிய பொறுப்புக்கு உள்ளாகியிருக்கிறார்கள் என்பதே. திருத்தந்தை இரண்டாம் ஜான்பால் கூறுவதாவது: "முதலாவது மில்லிணியம் புனிதர்களுக்கானது, இரண்டாம் மில்லினியம் குருக்கள் துறவிகளுக்கானது. மூன்றாவது மில்லினியமோ பொதுநிலை யினருக்கானது" என்பது ஈண்டு குறிப்பிடத்தக்கது.

முதல் 4 நூற்றாண்டுகளில் திருச்சபையை வளர்த்தது பொதுநிலையினரே. பிறகு நிறுவனமாக்கப்பட்டபின் உலகெங்கும் திருச்சபை வேரூன்றியது. ஆனால் சென்ற 20ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் புற்றுகள் போன்று தோன்றிய சிறு சிறு குழுக்கள் ஆவியானவரின் குழுக்கள் என்றும், (பெந்தகோஸ்தே) யெகோவா வின் சாட்சியம், ஏழாம் நாள் அட்வென்டிஸ்ட், பாப்டிஸ்ட், மெதாடிஸ்ட், என்றும் பலவாறாக சிதைத்து சின்னாபின்னமாக்கி விட்டன. பிற இனத்தவர்கள் மத்தியில் எந்த சபை உண்மையான இயேசு நிறுவிய சபை என்பதே தெரியாமல் இருக்கிறது. ஊடகங்களில் 1 வாரத்திற்குள் 100 க்கும் மேற்பட்ட சபையில் பேசுகிறார்கள். இந்தக் குளறுபடிகளிலிருந்து இயேசு நிறுவிய இறையரசுச் சமூகம் கத்தோலிக்கத் திருச்சபையில் மட்டுமே உண்டு என்று பொதுநிலையினராகிய நாம் எடுத்துச் செல்ல, செய்ய, வழிகாட்ட கடமைப்பட்டிருக்கிறோம். நீண்டநெடும் தூக்கத்தில் இருந்த பொதுநிலையினரை வத்திக்கான்சமூகம் தட்டியெழுப்பியது. சட்டென்று எழுந்தவர்கள் உடனடியாகத் தம்பணி தொடர்ந்தனர். இன்னும் படுக்கையில் புரண்டு கொண்டிருப்பவர்கள் ஒன்றும் தெரியாதவர்களைப் போல நாடகமாடுகிறார்கள். விண்ணைப் பிளக்கும் அளவுக்கு வெடித்ததைப் பார்த்த செவிடன், "அங்கே என்ன புகையாய் இருக்கிறது" என்று கேட்டதைப் போல இருக்கிறது.

"பிதா சுதன் பரிசுத்த ஆவியின் பெயராலே" என்று ஆரம்பித்து "சென்று வாருங்கள் திருப்பலி முடிந்தது" என்று கூறுவது வரை குருக்களோடு பொதுநிலையினரும் இணைந்து ஜெபிக்கின்றனர். குருவின் வாசகங்களை ஏற்றுக்கொள்ளும் முகத்தான் 'ஆமென்' என்றும் ஆண்டவர் உங்களோடு இருப்பாராக என்பதற்கு 'உம்மோடும் இருப்பாராக என கடவுளின் ஆசியுரைகளை ஒருவரை ஒருவர் ஏற்றுக்கொள்ளும் பரஸ்பர பாங்கு நமது திருவழிபாடு.

பொதுநிலையினரின் ஈடுபாட்டை இன்னும் அதிகமாக்கும் வழிமுறைகள்

1) சில சிறப்பு ஞாயிறு வழிபாடுகளில் இளையோர், பகத்த சபைகள் பணிக்குழுவினர் திருவழிபாட்டின் போது பவனியாக விவிலியத்தைக் கையிலேந்தி, பூத்தெளித்து, பூரண கும்ப மரியாதை செய்வதோடு மட்டும் நிறுத்திவிடாமல், பொது நிலையினர் திருவழிபாட்டு நாட்களுக்குரிய புனிதர்களின் வரலாற்றை திருப்பலிக்கு முன் வாசிக்கச் செய்யலாம். ஏனெனில் நம்முடைய விசுவாச அறிக்கையில் "நாம் புனிதர்களின் உறவை விசுவசிக்கிறோம்" எனக் கூறுகிறோம். நம்முடைய ஜெபங்களோடு புனிதர்களின் பரிந்துரை ஜெபமும் நமக்குத் தேவை.

2) திருப்பலிக்கு பின்னர் சுமார் 10 நிமிடங்களை சில வாசகங்களை வாசிக்கச் செய்யலாம். வத்திக்கான் சங்க ஏடு, திருச்சபை சட்டம், தல ஆயர்களின் சுற்றுமடல், திருத்தந்தையின் சுற்றுமடல்கள், விசுவாசிகளுக்குத் தெரியவில்லை. நமது ஆங்கில தமிழ் மாத இதழ்களில் அவைகள் தெளிவாக வெளியிடப்படுகின்றன. திருச்சபையின் பொதுநிலையினரில் சிலர் நற்செய்திப் பணியாளர்கள், அருட்பணி உதவியாளர்கள், தன்னார்வத் தொண்டர்கள் உண்டு. இவர்களையும் நற்செய்தியைப் பகிர்ந்து கொடுக்கச் செய்யலாம்.

தொடரும்...

## விண்ணக வாழ்வின் முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி

பிறப்பு:02-08-1955



இறப்பு : 27-06-2018

Rev. Fr. C. **தூசைகண்ணு**

**குருப்பட்டம் : 17-05-1984**

**ஆண்டவருக்குள் மரிக்கிறவர்கள் பாக்கிய வான்கள் ஏனெனில் அவர்கள் தங்கள் கடமை முடிந்து இளைப்பாறுகிறார்கள் - திருவெளி.14:13**

**இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக 27-06-2019 வியாழக்கிழமை காலை 6.45 மணிக்கு ஏற்காடு-கார்மல் அருட்சகோதரிகள் இல்லத்திலும், காலை 5.30 மணிக்கு இருதயம்பட்டு புனித விண்ணரசி அன்னை ஆலயத்திலும் திருப்பலி நடைபெறும்.**

**பிரிவால் துயருறும்**
**அருட்சகோதரி. C. லூர்துமரி,**
**கார்மல் அருட்கன்னியர் இல்லம், ஏற்காடு.**
**குடும்பத்தினர், உறவினர்கள் மற்றும் நண்பர்கள்.**

## விண்ணக பிறப்பின் 5-ஆம் ஆண்டு நினைவு

தோற்றம்: 09-01-1922



மறைவு: 15-06-2014

திருமதி. R. **எலென் ஃபிலோமினா**

**அம்மா! உங்களை நாங்கள் நேசிக்கிறோம்.**

"வாழ்ந்தாலும் நாம் ஆண்டவருக்கென்றே வாழ் கிறோம்; இறந்தாலும் ஆண்டவருக்கென்றே இறக்கிறோம்" (உரோமை.14:8)

15-6-2019 சனிக்கிழமை மாலை 5.30 மணிக்கு புதுவை, புனித ஜென்ம ராக்கினி அன்னை பேராலயத்தில் திருப்பலி நிறைவேற்றப்பட்டது. இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக ஜெபிக்க வேண்டுகிறோம்.

எங்கள் பாசமுள்ள அன்பு தாயை இழந்து
என்றென்றும் மங்காத நினைவுகளுடன் வாழும்
**பிள்ளைகள்**
புதுவை.

## விண்ணக வாழ்வின் நான்காம் ஆண்டு நினைவு அஞ்சலி

பிறப்பு: 18-08-1941



இறப்பு: 27-06-2015

**திரு.செங்கோல் மூஸ்த்தேன் தூசைராஜ்**

உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவர் இறப்பினும் வாழ்வார் - யோவான்.11:25

இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக 27.6.2019 வியாழன் மாலை 5.30 மணிக்கு புதுவை, ஜென்மராக்கினி அன்னை பேரால யத்தில் நிறைவேற்றப்படும் திருப்பலியில் கலந்து கொண்டு அன்னாரின் ஆன்ம இளைப் பாற்றிக்காக ஜெபிக்க வேண்டுகிறோம்.

கணவரை இழந்து துயருறும்
மனைவி: **ஜெயமணி செங்கோல்**
மகன்: **செங்கோல் ஆந்திரே ஜாஸ்மின்**
மருமகள்: **செங்கோல் ரூபி சகாயமேரி**
மற்றும் **பேரப்பிள்ளைகள்.**
புதுவை.

## விண்ணக வாழ்வின் மூன்றாம் ஆண்டு நினைவு அஞ்சலி

தோற்றம்: 9-12-1959



மறைவு: 24-06-2016

**திரு ச. ஜான் சேவியர்**

Retd.E.D.P. Asst. Sugar Mill, Ariyur.

என் ஜீவியத்தில் என்னை நேசித்தவர்களே மரணத்திலும் என்னை மறவாதீர்கள்.

திருப்பலி: 24.6.2019 திங்கள் காலை 6.00 மணிக்கு ரெட்டியார்பாளையம் புனித ஆந்திரேயா ஆலயத்திலும், காலை 6.00 மணிக்கு உப்பளம், புனித சவேரியார் ஆலயத்திலும் திருப்பலி நிறைவேற்றப்படும்.

பிரிவால் துயருறும்
**மனைவி, பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் மற்றும் வரம் குடும்பத்தினர்.**

## விண்ணக வாழ்வின் 30-ஆம் நாள் நினைவு அஞ்சலி

தோற்றம்: 13-06-1940



மறைவு: 28-05-2019

திரு C. **போனிபேஸ்**

உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவர் இறப்பினும் வாழ்வார் -யோவான்.11:25

இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக 29-06-2019 சனிக்கிழமை மதியம் 12.00 மணிக்கு புதுவை, திரு இருதய ஆண்டவர் பசிலிக்காவில் நிறை வேற்றப்படும் திருப்பலியில் கலந்து கொண்டு செபிக்க வேண்டுகிறோம்.

பிரிவால் துயருறும்
**மகன், மகள், மருமகன்,**
**பேத்தி மற்றும் உறவினர்கள்.**

## விண்ணக வாழ்வின் மூன்றாம் ஆண்டு நினைவு அஞ்சலி

தோற்றம்: 05-02-1948



மறைவு: 27-06-2016

**உயர்திரு** V.C. **பெஞ்சமின்** Rtd. N.M.S.

என் ஜீவியத்தில் என்னை நேசித்தவர்களே மரணத்திலும் என்னை மறவாதீர்கள்.

திருப்பலி: 27.6.2019 வியாழன் காலை 6.00 மணிக்கு எறையூர், புனித ஜெபமாலை அன்னை ஆலயத்தில் இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக திருப்பலி நிறைவேற்றப்படும்.

கணவரை இழந்து துயருறும்
அன்பு மனைவி: B.**ஜெசிந்தா**
**அன்பு மகன்கள், மருமகள்கள்,**
**பேரப்பிள்ளைகள்**
**மற்றும் உறவினர்கள்.**
எறையூர்.

**ஹாங்காங்கில் அமைதி நிலவ செபியுங்கள்:** ஹாங்காங்கில் இடம்பெறும் போராட்டங்கள், இவ்வாரத்தில் வன்முறையாக மாறி, பதட்டநிலைகள் உச்சத்தை எட்டிக்கொண்டிருக்கும் வேளை, ஹாங்காங் அரசுக்கும், போராட்டதாரர்களுக்கும் இடையே ஒருவரை ஒருவர் மதிக்கும் விதத்தில் உரையாடல் இடம் பெறுமாறு, ஹாங்காங் அப்போஸ்தலிக்க நிர்வாகி கர்தினால் John Tong அவர்கள் அழைப்பு விடுத்துள்ளார். ஹாங்காங்கின் நிலவரம் குறித்து 'வத்திக்கான் செய்தி' (Vatican News) பேட்டியளித்த கர்தினால் Tong அவர்கள், அந்நகரில் அமைதி நிலவ செபிக்கு மாறு கத்தோலிக்கரைக் கேட்டுக்கொண்டார். அதே நேரம் அங்கு இடம்பெறும் வன்முறைகள் குறித்த தனது கண்டனத்தையும் வெளியிட்டார். சர்ச்சைக்குரிய ஹாங்காங் மசோதா குறித்த பேச்சுவார்த்தையைத் தடைசெய்யும் விதமாக, போராட்டக் காரர்கள், அரசுக் கட்டடங்களைச் சேதப்படுத்த முயற்சித்த வேளை, காவல்துறை கண்ணீர் புகை குண்டுகளை வீசியதில் 21 காவல்துறையினர் உட்பட 72 பேர் காயமடைந்துள்ளனர். குடிமக்கள் வன்முறையைப் பயன்படுத்தினால், அது கண்ட னத்துக்குரியது என்று கூறியுள்ள கர்தினால் ஒருவரையொருவர் மதிக்கும் சூழலில் பேச்சுவார்த்தை இடம்பெற வேண்டும் என வலியுறுத்தினார். ஒரு நாட்டிலிருந்து கடத்தப்பட்டு வேறொரு நாட்டிற்கு வந்தடைந்த குற்றவாளியை, அவரது தாயகத்து ஆட்சியாளரிடமே மீண்டும் ஒப்படைத்தல் குறித்த சட்டத்தைக் கொண்டு வருவதற்கு ஹாங்காங் அரசு முயற்சிகள் எடுத்ததை முன்னிட்டு போராட்டங்கள் வலுப்பெற்றுள்ளன. தன் கருத்தியல் களிலிருந்து வேறுபட்டுச் செயல்படும், சமூக ஆர்வலர்கள் மற்றும் மக்களைத் தடைசெய்து, அவர்களை கைது செய்வதற்கு சீன அரசு ஹாங்காங் அரசின் இந்த சட்டத்தைப் பயன்படுத்தக்கூடும் என்று, ஹாங்காங் மக்கள் அஞ்சுகின்றனர் என ஆசியச் செய்தி கூறுகின்றது. இதற்கிடையே, இந்த எதிர்ப்புப் போராட்டங்களை யொட்டி, ஹாங்காங் அரசு தற்போது அம் முயற்சியை நிறுத்தி வைத்துள்ளது எனச் சொல்லப்படுகின்றது.

**காமெரீனோ நகரில் திருத்தந்தையின் மூவேளை செப உரை:** ஜூன் 15, கடந்த சனிக்கிழமையன்று இத்தாலியின் சார்தீனியாவில் அருளாளராக உயர்த்தப்பட்ட இறையடியார் எத்வீஜே கார்போனி (Edvige Carboni) அவர்களின் நம்பிக்கை மற்றும் பிறரன்பின் எடுத்துக்காட்டை முன்வைத்து, ஜூன் 16, இஞ்ஞாயிறன்று தன் மூவேளை செப உரையைத் துவக்கினார், திருத்தந்தை பிரான்சிஸ். 2016ம் ஆண்டு, நில நடுக்கத்தால் பாதிக்கப்பட்டப் பகுதிகளில் வாழும் காமெரினோ நகர மக்களுக்கு திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், ஞாயிறு திருப்பலியை நிறைவேற்றிய பின், வழங்கிய மூவேளை செப உரையில், இறையடியார் கார்போனி அவர்கள் தன் வாழ்நாள் முழுவதும், இறைவனுக்கும், அயலவருக்கும் பணியாற்றுவதில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டார் என்று கூறினார். மேலும், ஜூன் 20 வருகிற வியாழனன்று சிறப்பிக்கப்படும் புலம்பெயர்ந்தோர் உலக நாள் குறித்து தன் மூவேளை செப உரையில் குறிப்பிட்ட திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், போராலும், அடிப்படை உரிமை மீறல் களாலும் பாதிக்கப்பட்டு, புலம்பெயர்ந்தோராக மாறியுள்ள குழந்தைகள், பெண்கள் மற்றும் ஆண்கள் குறித்து சிறப்பான விதத்தில் எண்ணிப் பார்க்க வேண்டிய நேரமிது என்று கூறினார். பாரசீக வளைகுடாப் பகுதியில் தற்போது எழுந்துள்ள பதட்டமான சூழல் குறித்தும், தன் மூவேளை செப உரையில், கவலையை வெளியிட்ட திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், நாடுகளிடையே, உரையாடலையும் அமைதியையும் ஊக்குவித்து, பேணிக் காக்க வேண்டிய கடமையையும் வலியுறுத்திக் கூறினார்.*-வத்.செய்தி.*

**பனமா திருப்பயணிகளை வாழ்த்திய திருத்தந்தை:** பனமா நாட்டிலிருந்து, வத்திக்கானுக்கு வருகை தந்த திருப்பயணிகளை, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், ஜூன் 13, இவ்வியாழனன்று திருப்பீடத்தில் சந்தித்து வாழ்த்திய வேளையில், அவர்கள் பல்வேறு வழிகளில் தனக்கு நன்றி கூறியதைக் குறிப்பிட்டு, தானும் அவர்களுக்கு நன்றியறிந்திருப்பதாக கூறினார். நன்றியைப்பற்றி பேசும் அதே நேரத்தில், நன்றி என்ற சொல்லும், உணர்வும் நம்மிடையே அடிக்கடி மறக்கப்படும் ஒரு விடயமாக மாறி வருகிறது என்பதையும், நன்றி என்ற உணர்வே நம்மை மனிதர்கள் என்ற முறையில் மேன்மைப்படுத்துகிறது என்பதையும் திருத்தந்தை எடுத்துரைத்தார். நம் குடும்பங்களில் பயன்படுத்தப்பட வேண்டிய மூன்று முக்கியமான பண்புகள், அனுமதி கேட்பது, மன்னிப்புக் கோருவது, நன்றி கூறுவது என்று சுட்டிக்காட்டியத் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இவற்றில் ஒன்று குறைந்தாலும், அந்தக் குடும்பத்தில் பிரச்சனைகள் உருவாகும் என்று கூறினார். இவ்வாண்டின் துவக்கத்தில் தான் பனமா நாட்டில் மேற்கொண்ட திருத்தூதுப் பயணம் குறித்தும், அங்குதான் சந்தித்த உலக இளையோர் குறித்தும தன் மகிழ்வை வெளிப்படுத்திய திருத்தந்தை, அந்தப் பயணத்திற் காக உழைத்த அனைவருக்கும் மீண்டும் தன் நன்றியை தெரிவித்தார். பனமா நாட்டில் வாழும் பழங்குடியினர். மற்றும் கறுப்பின மக்கள் அனைவரோடும் அந்நாட்டு மக்களை ஒன்றிணைந்து வாழ்வது தனக்கு மன நிறைவை அளித்தது என்பதை, திருப்பயணிகளிடம் கூறியத் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், அந்நாட்டு மக்களை அன்னை மரியா பாதுகாத்து வழிநடத்த வேண்டும் என்று வாழ்த்தினார். - வத்.செய்தி

**திருத்தந்தை - துன்புறும் வயதானவர்களுடன் நெருக்கமாக உள்ளேன்:** உலகில் வயதானவர்களில் ஆறு பேருக்கு ஒருவர், ஏதாவது ஒரு முறையில் உரிமை மீறல்களை எதிர்கொள் கின்றனர் என்று சொல்லி, ஐ.நா. பொது அவை, 2011ம் ஆண்டில், வயதானவர்களின் உரிமைகள் மீறப்படுவது குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் உலக நாளை உருவாக்கியது. 2050 ம் ஆண்டுக்குள், உலக அளவில் இளையோரின் எண்ணிக்கை யைவிட, அறுபது வயதுக்கு அதிகமானோரின் எண்ணிக்கை அதிகமாக இருக்கும் என்றும், புறக்கணிக்கப்படல், வன்முறை, உரிமை மீறல்கள் போன்ற துன்பங்களை முதியோர் எதிர் கொண்டு வருகின்றனர் என்றும், ஆய்வுகள் தெரிவிக்கின்றன. ஐ.நா.வின் உலக நலவாழ்வு அமைப்பின் (WHO) கூற்றுப்படி, உலகில் முதியோர்களில், 4 முதல் 6 விழுக்காடு வரை, ஏதாவது ஒருமுறையில் உரிமை மீறல்களை எதிர்கொள்கின்றனர் என்றும், இவர்களில் பெரும்பாலானோர் தங்கள் நிலைமையை வெளியே சொல்வதில்லை என்றும் தெரியவ வருகின்றது. மேலும், வயதானவர்களின் உரிமைகள் மீறப்படுவது குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் உலக நாளை முன்னிட்டு அறிக்கை வெளியிட்டுள்ள, ஐ.நா. மனித உரிமைகள் வல்லுனர் Rosa Kornfeld-Matte அவர்கள், வயதானவர்கள், பாலியல் வன்முறை களுக்கு உள்ளாவது அதிகரித்து வருகிறது என்று கவலை தெரிவித்துள்ளார். (UN)

**காலநிலை மாற்றத்தால் அதிகம் பாதிக்கப்படுவோர் ஏழைகள்:** தற்போது மனித சமுதாயம் எதிர்கொள்ளும் காலநிலை மாற்றத்தின் எதிர்மறை விளைவுகளைக் குறைப்பதற்கு, சரியான மற்றும் உறுதியான நடவடிக்கைகள் உடனடியாக எடுக்கப் பட்டால், அம்மாற்றத்தின் மிக மோசமான தாக்கங்களைத் தவிர்க்க முடியும் என்று, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கூறினார். "சக்தி பரிமாற்றம் மற்றும் பொதுவான நம் இல்லத்தைப் பராமரித்தல்" என்ற தலைப்பில், நடந்த கூட்டத்தில் திருத்தந்தை திருப்பீட ஒருங்கிணைந்த மனித முன்னேற்ற அவை நடத்தும் பன்னாட்டு கருத்தரங்கில் கலந்துகொள்ளும் பிரதிநிதிகளை, ஜூன் 14, வெள்ளியன்று திருப்பீடத்தில் சந்தித்து உரையாற்றிய திருத்தந்தை இவ்வாறு கூறினார். காலநிலை மாற்றத்தைக் குறைப்பதற்கு, மற்றவர்கள் நடவடிக்கை எடுப்பார்கள் என்றோ அல்லது, குறுகியகால பொருளாதார ஆதாயங்களுக்கு முன்னுரிமை கொடுத்தோ, நாம் காத்திருக்க வேண்டிய அவசியம் இல்லை என்றுரைத்த திருத்தந்தை, காலநிலை மாற்றம் குறித்த பிரச்சனைக்கு உடனடியாக நாம் செயல் திட்டங்களில் இறங்க வேண்டும். இதில், திருஅவை தனது பங்கை ஆற்றும் என்று கூறினார். காலநிலை மாற்றத்தின் எதிர்விளைவுகளால் ஏழைகளும், நம் வருங்காலத் தலைமுறைகளுமே அதிகம் துன்புறுவர் என்றும், இன்றையத் தலைமுறைகளின் பொறுப்பற்ற தன்மைக்கு, நம் பிள்ளைகளும், பேரப்பிள்ளைகளும் பலியாகக் கூடாது என்றும் கூறியத் திருத்தந்தை, இப்பூமி மற்றும் ஏழைகளின் அழுகுரல்களை நிறுத்துவதற்கு, துணிச்சல் அவசியம் என்றும் கூறினார்.

**Published and Printed by** Rev.Fr.C.ANTONI ROCHE **on behalf of Most Rev.** Dr. A. ANANDARAYAR, D.D.,D.C.L., Archbishop of Pondicherry & Cuddalore. Printed at Mission Press, 196, Cathedral Street, Puducherry - 605 001. Published from Mission Press, 196, Cathedral Street, Puducherry-605 001. Editor: Rev.Fr.C.ANTONI ROCHE. Manager : Very Rev. Msgr. A. Arulanandam.